மாநகர சபை, யாழ்ப்பாணம்

பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 சித்திரை 02 புதன்கிழமை (15.04.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:140

# ஆயுதங்களைக் கைவிட்டாலே புலிகளுடன் போர்நிறுத்தம்

## அதுவரை இணங்கமுடியாது என அரசு நிராகரிப்பு



கொழும்பு, ஏப்ரல்15

விடுதலைப்புலிகள் ஆயுதங்களை கைவிட்டால் மட்டுமே அவர்களுடன் போர் நிறுத்தம் செய்யமுடியும். புலிகள் தமது ஆயுதங்களைக் களைந்த பின்னர் மட்டுமே அவர்களுடன் பேச முடியும். காலத்தை வாங்கித் தாம் மீண்டும் பலம் அடைவதனை நோக்கமாகக்கொண்டு அவர்கள் அரசியல் தீர்வு குறித்து பேசுவதற்கு இணங்கமுடியாது; இடமளிக்க இயலாது.

பேச்சுவார்த்தைக்கு அடித்தளத்தைக் கொண்டிருக்கும், சர்வதேச அனுசரணையுடன் கூடிய போர் நிறுத்தத்துக்கு தாம் தயார் என்று விடுதலைப் புலிகள் விடுத்த அழைப்பை அரசாங்கம் உடனடியாகவே, திட்டவட்டமாகவே மேற்கண்டவாறு தெரிவித்து நிராகரித்து விட்டது. (10 ஆம் பக்கம் பார்க்க)

## காங்கேசன் - திருமலை கப்பல் சேவை இன்று

யாழ்ப்பாணம், ஏப்.15

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று நடைபெறும் என்று யாழ். அரச அதிபர் கே.கணேஷ் நேற்றிரவு தெரிவித்தார். (10 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லையில் உணவுப் பொருள் மிக உச்ச விலைகளில்

கொழும்பு, ஏப்.15

முல்லைத்தீவில் மக்கள் பாதுகாப்பு வலயத்தில் உணவுப் பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதுடன், விலைகளும் மிக உச்ச நிலைக்கு சென்றுள்ளதாக இணையத்தளங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இணையத்தளங்களின் தகவல் பிரகாரம் - ஒருகிலோ -

அரிசி - 300 ரூபா, கோதுமை மா - 350ரூபா, சீனி - 2,000 ரூபா, வெங்காயம் - 9,000ரூபா, (10 ஆம் பக்கம் பார்க்க)

## இப்போதைய பிரச்சினைக்கு ஒரே தீர்வு புலிகள் ஆயுதங்களைக் கீழே போடுவதுதான்



### ஐ.நா. மனிதாபிமான அதிகாரி ஹோம்ஸ்

லண்டன், ஏப்.15

இலங்கையின் வடக்கே நிலவும் இப்போதைய பிரச்சினைக்கு ஒரே தீர்வு விடுதலைப்புலிகள் தமது ஆயுதங்களைக் கீழே போடுவதுதான்.

இவ்வாறு கூறியிருக்கிறார் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான பணிகளுக்கான உதவிச் செயலாளர் நாயகம் ஜோன் ஹோம்ஸ்.

இலங்கை நெருக்கடி குறித்து பி.பி.ஸி (10 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் புதுடில்லியில் இன்றும் நாளையும் அரச அதிகாரிகளுடன் பேச்சு

கொழும்பு, ஏப்.15

ஈழத் தமிழர்கள் தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள், அனுபவிக்கும் அவலங்கள் தொடர்பாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பி னர் இன்று புதுடில்லியில்முக்கிய தலைவர்களைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளனர். (10 ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டு நாள் தாக்குதல் இடைநிறுத்தத்தின் போது முல்லையில் 6 பேர் பலி! 93 பொதுமக்கள் காயம்!!

கொழும்பு, ஏப்.15

அரசாங்கத்தின் தாக்குதல் இடைநிறுத்தம் நடைமுறையில் இருக்கின்ற போதிலும், திங்கட்கிழமை இரவு பத்துமணி முதல் அதிகாலை வரையில் பாதுகாப்பு வலயத்தில் உள்ள வலைஞர்மடம் பகுதியின் எல்லைப் புறத்தில் இரு தரப்புக்களுக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சமர் தொடர்ச்சியாக இடம்பெற்றதாக வன்னித் தகவல்கள் தெரிவித்ததாக பி.பி.ஸி. அறிவித்தது. (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஏ-9 வீதியை அடுத்த மாதம் மக்கள் பாவனைக்குத் திறக்க அரசாங்கம் முயற்சி

கொழும்பு, ஏப்.15

அடுத்த மாதத்தில் ஏ-9 வீதியை மக்கள் பாவனைக்குத் திறந்து விடுவதற்குத் திட்டமிட்டுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

ஏ-9 வீதியைத் திறந்து விடும் பொருட்டு கிளிநொச்சியில் வீதி அபிவிருத்தி அதிகார (10 ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்பட்டு புலிகளின் தமிழீழக்கனவு பொசுக்கப்படும்

### புதுவருடச் செய்தியில் இராணுவத் தளபதி

கொழும்பு, ஏப்.15

பயங்கரவாதத்தை நாட்டில் இருந்து முற்றாக அழித்து விடுதலைப் புலிகளின் தமிழீழம் என்ற கனவு பொசுக்கப்படும்.

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா மேற்கண்டாவாறு தெரிவித்தார்.

சிங்கள - இந்து புத்தாண்டை ஒட்டி வெளியிட்டுள்ள செய்தியிலேயே இராணுவத் தளபதி இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

தமது செய்தியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

**புலிகள் அமைப்பு 18, 000 பேரை இழந்துவிட்டது**

விடுதலைப் புலிகள் அமைப்பு தனது படை அணியினரில் 18 ஆயிரம் பேரை (10 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி மக்களுக்கு அவசர மனிதாபிமான உதவிகளை அனுப்புவதற்கு இருதரப்புகளும் ஒத்துழைப்புத் தரவேண்டும்

### இணைத்தலைமை நாடுகள் கோரிக்கை

வாஷிங்ரன், ஏப்.15

வன்னியில் சிக்கியுள்ள மக்களுக்கு தேவைப்படும் மனிதாபிமான உதவிகளை உணவு மற்றும் மருந்துப்பொருள்களை அவசரமாக அனுப்பவேண்டும். காயமுற்றவர்களையும் மற்றும் நோயாளர்களையும் அப்புறப்படுத்த ஏற்பாடு செய்யவேண்டும். இவற்றைச் செயற்படுத்த இரண்டுதரப்புகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

மேற்கண்டவாறு இணைத்தலைமைகள் கோரியுள்ளன.

இலங்கை அரசு அறிவித்துள்ள தாக்குதல் இடைவெளியை அடுத்து அங்குள்ள மனிதாபிமான நிலைமைகள் குறித்து ஆராய இணைத்தலைமை நாடுகளின் பிரதிநிதிகள் கடந்த திங்கட்கிழமை அமெரிக்க ராஜாங்க அமைச்சில் கூடினர்.

அமெரிக்க ராஜாங்க அமைச்சின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக் கான உதவிச் செயலாளர் ரிச்சர்ட் பௌச்சர் (10 ஆம் பக்கம் பார்க்க)

## புல்மோட்டைக்கு நேற்று கப்பல் மூலம் 474 பேர்

கொழும்பு, ஏப்.15

புதுமாத்தளன் பிரதேசத்தில் இருந்து காயமடைந்த மற்றும் அவர்களின் உறவினர்கள் அடங்கிய 474 பேர் நேற்றுப் புல்மோட்டை தள வைத்தியசாலைக்கு செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவினரால் ''கிறீன் ஓஷன்'' கப்பல் மூலம் அழைத்துச் செல்லப்பட்டனர். (10 ஆம் பக்கம் பார்க்க)

## எமது அனுசரணைப்பணி 3 வருடங்களுக்கு முன்னரே முடிவடைந்து விட்டதே!



### நோர்வேயின் விசேட தூதுவர் பௌவர் சொல்கிறார்

ஒஸ்லோ, ஏப்.15

இலங்கை சமாதான முயற்சிகளில் தமது அனுசரணைப் பணி மூன்று வருடங்களுக்கு முன்னரே முடிவடைந்துவிட்டதாக நோர்வே அறிவித்துள்ளது.

சமாதான முயற்சிகளின் விசேட தூதராகப் பணியாற்றிய ஹன்ஸன் பௌவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சமாதான முயற்சிகளின் அனுசரணைப் பணியில் இருந்து நோர்வேயை இலங்கை அரசு வெளியேற்றியது தொடர்பாக வெளி (10 ஆம் பக்கம் பார்க்க)

## நிரந்தர போர் நிறுத்தத்தை வலியுறுத்தக் கோரி அவுஸ்திரேலியப் பிரதமரின் வாசஸ்தலத்தில் ஈழத்தமிழர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

கன்பெரா, ஏப்.15

இலங்கையில் நிரந்தர போர் நிறுத்தத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு ராஜதந்திர ரீதியில் அவுஸ்திரேலியா உதவ வேண்டும் என்று கோரி தமிழ் ஆர்ப்பாட்டக்காரர்கள் கன்பெராவில் உள்ள பிரதமரின் வாசஸ்தலத்தின் முன்னால் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ் ஆர்ப்பாட்டக்காரர்கள் கன்பெராவில் உள்ள பிரதமரின் வாசஸ்தலத்தை நேற்று செவ்வாய்க்கிழமை (10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



சித்திரை விரோதி வருட புத்தாண்டு தினத்தை முன்னிட்டு நல்லூர் கந்த சாமி கோயிலில் விசேட பூசைகள் இடம்பெற்று முருகன் வீதியுலா வருவதை படங்களில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

# ஆலய வழிபாடுகளுடன் புத்தாண்டு நாள் அமைதியாகவும் அடக்கமாகவும் கழிந்தது

யாழ்ப்பாணம், ஏப்.15

குடாநாட்டில், சித்திரைப்புத்தாண்டு பூசை வழிபாடுகளுடனும் இறை பிரார்த்தனையுடனும் மிகவும் அமைதியான முறையில் கழிந்தது.

நேற்றுமுன்தினம் முன்னிரவில் புத்தாண்டு பிறந்த நேரமான 11.07 மணிக்கு ஆலயங்களில் விசேட பூசைகள், அபிஷேகங்கள் இடம்பெற்றன. பாதுகாப்புப் படையினர் ஊரடங்குச்சட்டத்தை தளர்த்தியிருந்ததால் நேற்று முன்தினம் முன்னிரவு புத்தாண்டு மலர்ந்த நேரத்தில் யாழ்.நகரில் உள்ள வர்த்தக நிலையங்கள், வங்கிகள் திறக்கப்பட்டு கைவிசேடம், சுபகாரியங்கள் என்பனவும் இடம்பெற்றன.

நேற்றுக் காலை வேளையிலும் வர்த்தக நிலையங்கள், வங்கிகள் என்பன திறக்கப்பட்டு கொடுக்கல், வாங்கல்களில் ஈடுபட்டிருந்தன. ஆலயங்களில் பொது மக்கள் இறை வழிபாட்டுடன் ஆன்மீகப் பிரார்த்தனையிலும் ஈடுபட்டிருந்தனர்.

புதுவருடக் கொண்டாட்டம் என்று கூறுமளவுக்கு நிகழ்வு எதுவும் நடைபெறவில்லை.

வன்னியில் உறவுகள் பேரவலப்பட்டுள்ள நிலையில் குடாநாட்டில் அடக்கமாகவும் அமைதியாகவும் ஆலயங்களுக்குச் சென்று வழிபாடு நடத்தியதுடன் நேற்றைய நாள் கழிந்தது.

நேற்று வீதிகளில் சனநடமாட்டம் மிகவும் குறைந்து காணப்பட்டது.

(1-9-111-224)

# வடக்கு யுத்தத்தை ½ மணி நேரத்தில் முடிக்கலாம் ஆனால் அங்குள்ள மக்களைப் பாதுகாக்க வேண்டியுள்ளது

## பிரதமர் ரட்ணசிறி தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.15

வடக்கு யுத்தத்தை சுமார் அரைமணி நேரத்தில் முடித்து வெற்றிவாகை சூடலாம் ஆனால் அங்குள்ள மக்களைப் பாதுகாக்க வேண்டிய பாரிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது. அதன் காரணமாகத்தான் இந்த யுத்தம் மெதுவாக நடைபெறுகின்றது - என பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க தெரிவித்தார்.

ஹொரணை ஸ்ரீ.ல.சு. கட்சி காரியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர் கூறியதாவது,

கடந்த 30 வருடமாக வட கிழக்கு பகுதியில் நிலைகொண்டிருந்த பயங்கரவாதத்தை அழித்து ஒழிக்கும் கால கட்டத்தில் நாம் இருக்கின்றோம். இந்தக் கொடிய பயங்கரவாதத்தை ஒழிக்க தென்பகுதியிலுள்ள அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்கினர்.

அதே போல் நாட்டின் அபிவிருத்தியிலும் ஒத்துழைப்பு வழங்க முன்வர வேண்டும். நாட்டின் யுத்தத்தின் போதும் நாட்டின் அபிவிருத்தியின் போதும் மாகாண சபைகளும் உள்ளூராட்சி மன்றங்களும் பாரிய ஒத்துழைப்பை வழங்கினர். அதே போல் இவைகள் மத்திய அரசிற்கும் தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டும் - என்றார்.

(50)

# அகிம்சை வழியில் தீர்வைத் தேடுமாறு தலாய்லாமா கோருகிறார்

பௌத்த மற்றும் இந்துமதப் பெரும்பான்மை மக்களுக்கு இடையில் நடைபெற்றுவரும் தொடர் யுத்தத்திற்கு அஹிம்சை வழியில் தீர்வினைத் தேடவேண்டும் என திபெத்தின் ஆன்மீகத் தலைவர் தலாய்லாமா கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள யுத்த நிறுத்த அறிவிப்பை பயன்படுத்தி இரு தரப்பினருக்கும் இடையில் பேச்சுவார்த்தை மூலமான நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென ஆன்மீகத் தலைவர் தலாய்லாமா குறிப்பிட்டுள்ளார்.

யுத்த நிறுத்த அறிவிப்பு வரவேற்கத்தக்கது. இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் அறிவிக்கப்பட்ட யுத்த நிறுத்தம் மிகவும் வரவேற்கத் தக்கதெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த யுத்த நிறுத்தம் தமிழ் சிங்கள மக்களிடையே சமாதான முன்னெடுப்புக்களில் புதிய பரிணாமத்தை ஏற்படுத்தும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். யுத்த வலயத்தில் சிக்கியுள்ள அப்பாவிச் சிவிலியன்களது நலன் குறித்து தாம் அதிக கவலை கொண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

# மொனராகலையில் இரண்டு நாள்கள் அடுத்தடுத்து ஆயுதக்குழு தாக்குதல்; திங்களன்று 2 பெண்கள் பலி

மொனராகலை மாவட்டத்தில் உள்ள கல்டெம் கிராமத்தில் நேற்றுமுன்தினம் இரவு ஆயுதக்குழு ஒன்று மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு பெண்கள் உட்பட மூவர் கொல்லப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் வெட்டுக் காயங்களுடன் மற்றுமொரு பெண் மொனராகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிராமவாசிகள் புத்தாண்டுப் பண்டிகைக்குத் தயாராகிக் கொண்டிருந்த வேளையில் அங்கு நுழைந்த ஆயுதக்குழு வொன்று அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டுத் தப்பிச் சென்றுள்ளதாகப் பொலிஸார் கூறுகின்றனர்.

ஏற்கனவே இந்தப் பகுதியிலுள்ள மஹாகொட யாய என்ற கிராமத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற இதே பாணியிலான ச்ம்பவமொன்றில் 9 கிராம வாசிகள் கொல்லப்பட்டும் மற்று மொருவர் காயமடைந்தும் இருந்தனர். அந்தச் சம்பவம் இடம்பெற்று 48 மணித்தியாலத்திற்குள் திங்களன்று பெண்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த இரண்டு தாக்குதல்களும் விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். தற்போது அந்தப் பகுதியில் பாதுகாப்புத்தரப்பினர் விசேட தேடுதல் நடவடிக்கை யொன்றை மேற்கொண்டுள்ளனர்.

# குருநகர் சீநோர் கட்டடத்தில் மீன் சந்தை இன்று திறப்பு

குருநகர், ஏப்.15

குருநகர் கடல் உணவு சந்தைப்படுத்தும் நிலையம் குருநகர் சீநோர் கட்டடத்தின் அருகாமையில் இன்று புதன்கிழமை மீளவும் திறந்து வைக்கப்பட உள்ளது.

யாழ். கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் மு.தர்மலிங்கம் தலைமையில் இன்று முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ள இத் திறப்பு விழா நிகழ்வில் யாழ். நகர கட்டளைத் தளபதிபிரிகேடியர் ரூவன் குலத்துங்க கலந்து கொண்டு நிலையத்தைத் திறந்து வைப்பார்.

கொழும்புத்துறை இராணுவ முகாம் கட்டளைத் தளபதி எம்.ஜி. சந்திரசிறி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் உதயன், ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சியின் யாழ். பிரதேசப் பொறுப்பாளர் றீகன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் குருநகர், பாஷையூர், சீநோர் இராணுவ முகாம்களின் கட்டளைத்தளபதிகள், யாழ். மாவட்ட கூட்டுறவு கடற்றொழிலாளர் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் சி.தவரட்ணம், ஜே/ 68 கிராம சேவையாளர் எஸ். யூலன், ஜே/ 69 கிராம சேவையாளர் எஸ். ஞானசேகரம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.

குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குத் தந்தை வண. பிதா றோ. நேசராஜா அடி களார் நெய்தலம் இயக்குநர் அருட்கலாநிதி அ.பி. ஜெயசேகரம் அடிகளார் ஆகியோர் ஆசியுரைகளை நிகழ்த்துவா.

(1-51)

# கிராம சேவையாளருக்கு நாளை கௌரவிப்பு

நவாலி, ஏப்.15

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் கடந்த வருடம் சமூக பாதுகாப்பு ஓய்வூதியத்திட்டத்தில் ஆயிரம் பேருக்கு மேல் சேர்த்துக் கொண்ட கிராம சேவையாளர்கள் மூவர் யாழ்.அரசாங்க அதிபரினால் நாளை பிரதேச செயலகத்தில் வைத்து கௌரவிக்கப்படவுள்ளனர்.

ஜே/133 ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் வை.சந்திரராசா, ஜே/134 நவாலி வடக்கு கிராம சேவையாளர் என்.தனபாலரட்ணம், ஜே/155 பெரியவிளான் சூரியகு [illegible] வாதலிங்கம் சமூக சேவை உத்தியோகத்தா அருந்தவராசா ஆகியோரும் கௌரவிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (1-100)

# பிற்போடப்பட்டுள்ளது

எமது நிலையத்தின் வளர்ச்சி நிதிக்காக எம்மால் முன்னெடுக்கப்பட்ட அதிஷ்டலாபச் சீட்டிழுப்பானது திட்டமிட்டபடி சித்திரைப் புத்தாண்டு அன்று குலுக்கல் செய்து அதிஷ்டசாலிகளை அறிவிக்க முடியவில்லை. இச் சீட்டிழுப்பின் இறுதித் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

கலாஜோதி சனசமூக நிலையம்,
திரோட்டர் வீதி, இணுவில் கிழக்கு.

தலைவர்.

# மரண அறிவித்தல்கள்

## பாவிலு அமிர்தநாதன்



உடுவில் தெற்கு, புதுமடம் - கர்த்தர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாவிலு அமிர்தநாதன் நேற்று (14.04.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாவிலு - மரியம்மா தம்பதியினரின் மகனும் அமரர் செல்லம்மாவின் அன்புக் கணவரும் ஜெயராணியின் அன்புத் தந்தையும் இருதயப்பிரகாசத்தின் மாமனாரும் இயுயின்மசனட் (கிராம அலுவலர்), யுடொக்சியா, ரெறென்சியா (திருச்சிலுவை தாதிய மாணவி), பியர்லின், யுஸ்ரின் மற்றும் வதனா, சுகீந்திரன் ஆகியோரின் பேரனும் திவ்வியாவின் பூட்டனும் ஆவார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனைகள் இன்று (15.04.2009) புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் புதுமடத்தில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.இயுயின் மசனட் (பேரன்)
(கிராம அலுவலர், உடுவில் பிரதேச செயலகம்).

உடுவில் தெற்கு,
புதுமடம்.

## நல்லான் கந்தையா



ஈவினை தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நல்லான் கந்தையா 13.04.2009 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லான் மற்றும் பொன்னி தம்பதியினரின் மூத்த மகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பட்டாணி - வள்ளி தம்பதியினரின் அன்பு மருமகனும் கிருஸ்ணராஜா - உதயமலர், உதயராஜா - வரதராசா, உதயரஞ்சினி - காலஞ்சென்ற தவராசா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2009) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மு.ப. 11 மணிக்கு அச்செழு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஈவினை தெற்கு,
புன்னாலைக்கட்டுவன்.

தகவல்:
குடும்பத்தினர்.

## பெரியான் நடேசன் (முள்ளானை, இளவாலை)

நகுலேஸ்வரா வீதி, கீரிமலையைப் பிறப்பிடமாகவும், முள்ளானை, இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட பெரியான் நடேசன் (ஓய்வுபெற்ற ஊழியர், இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம் K.K.S) 14.04.2009 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பெரியான் - தெய்வி தம்பதியினரின் அன்பு மகனும், அசுவதியின் அன்புக் கணவரும், பூதன், வடிவேலு, ராதா, நாகம்மா, பூரணம், செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், உதயகுமார் (குமார் -லங்கா சிமெந்து நிறுவனம்), உதயகுமாரி (வபா), சந்திரா குமாரி (சந்திரா), சந்திரகுமார் (பவுணன், ஜேர்மனி), ஆகியோரின் பாசமிகு தந்தையும், புஸ்பவசந்தாதேவி, துரைசிங்கம் (லங்கா சிமெந்து நிறுவனம் K.K.S) தங்கவடிவேலு (கிளி), கவிதா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சஜிதா, டஜிதா, அஜிதா, டஜிந்தன், ரம்யா, லக்சிகா, லயனியா, சண்சிகா, சஞ்சீவன், சாருஜன், துஷாந்தினி, கிருஸ்ணா, மேனன், பிரவீன், பவிஷன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (15.04.2009) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முள்ளானை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
உதயகுமார் (மகன்)
(லங்கா சிமெந்து நிறுவனம் K.K.S).

முள்ளானை,
இளவாலை. (C/555081)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## காலத்தின் தேவை அறிந்து சேவை

நேற்றுப் புத்தாண்டு. அன்று எமது பிரதேசத்துக்கு வளம் சேர்க்கும் சிறந்த பணி ஒன்று ஆரம்பமாகியுள்ளது. மனம் திறந்து பாராட்டப்பட வேண்டிய பணி. எங்கள் குடாநாட்டின் பல வளங் களுக்கு மட்டுமன்றி நாம் சுகவாழ்வு காண்பதற்கும் அது பேருதவியாக அமையும்.

''நாமும் வளர்வோம், நாட்டையும் வளர்ப்போம்'' என்ற தொனிப்பொருளில் வீட்டுக்கொரு மரம் வளர்க்கும், வீதிக்குவீதி மரங்கள் நடும் செயற்பாட்டை யாழ்ப்பாணத்தில் இயங்கும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் சித்திரைப் புத்தாண்டுத் தினமான நேற்று ஆரம்பித்திருக்கின்றன. எங்கள் பிரதேசத்தை நாமே கட்டி எழுப்ப வேண்டும். அரசாங்கங்கள் உதவும் என்று எதிர்பார்த்திருப்பது காலத்தை கரைத்துக் கொள்ளும் அவம் என்பது அனுபவம்.

நன்றும் தீதும் பிறர் தரவாரா. எமது பிரதேசத்தின் வளத்தைப் பெருக்குவதில் நாமே அக்கறை கொள்ள வேண்டும். மனிதனதும் ஏனைய ஜீவராசிகளினதும் வாழ்வு இயக்கையோடு இசையவேண்டிய தேவை: பூகோளச் சமன்பாடு.

இயற்கை எந்த ஒரு வகையில் கெட்டுப் போனாலும், நீர்த்துப்போனாலும் பாதிப்புறுவது இந்த மண்ணில் வாழும் மனிதன் உட்பட உயிரினங்கள் தான். மனிதனைப் போன்று ஏனையவை இயற்கையை எல்லையற்ற விதத்தில் சீண்டுவது இல்லை. இயற்கை வளங்களைச் சூறையாடி, பெருவாழ்வு குறித்துச் சிந்திப்பவன் மனிதன் மட்டும்தான். ஆறறிவு என்ற பெரும் பொக்கிஷத்தை ஆண்டவன் தனக்குத் தந்துவிட்டான் என்ற மமதையால், அவன் தனது சுயநலம் கருதியே இயற்கையைச் சீண்டுகிறான். அதுவே மீண்டும் வந்து அவனைக் குத்திக் குதறுகிறது.

உலகளாவிய ரீதியாக நோக்குவே[illegible] இயற்கை தந்த வளங்களை அழித்து, அபிவிருத்தி அல்லது முன்னேற்றம் என்ற இலச்சினைக் குறியுடன் மனிதன் தனது சுயநலத்துக்குப் பயன்படுத்தியாதல் அதன் பலன்களை அவனே அனுபவிக்க நேர்ந்துள்ளது.

இயற்கை பதிலுக்குச் சீற்றம் கொண்டு சுனாமி என்றும் புயல் என்றும் வந்து மனிதனைக் குத்திக் குதறுகின்றன. ஓசோன் படலத்தில் ஓட்டை விழுந்திருக்கிறது. பூமி மீதான பச்சைப் போர்வை (Green Cover) சிதைந்து பல பாதிப்பான, ஆபத்தான விளைவுகளைத் தந்துகொண்டிருக்கிறது. வரட்சி, மழை வீழ்ச்சி என்ற எண்ணற்ற பாதிப்புகள் மறுபுறம்.

குடாநாட்டின் மரவளத்தை எமது தந்தையும், பேரனும் பேணியது போன்று பேணுவதற்கு நாம் தவறிவிட்டோம். மண்ணில் நல்ல வண்ணம் வாழ மரங்களே இயற்கை தந்த பெரும் சொத்து என்பதனை இளம் சந்ததிகள் பல தலைமுறைகளுக்கு மறந்து போயின - அவற்றின் சேவையும் தேவையும் தெரியாததால்!

போர் என்ற பெயரில் வந்த குறுக்கீடுகள் எமது பிரதேசத்தின் குறியீடான பனை வளத்தை துவம்சம் செய்தன. நாமும் உயிர் வேலிகளை கல் மதில்களாக்கி பாதகமான விளைவைத் தேடிக்கொண்டோம். போதாக்குறைக்கு நினைத்தவுடன் மரங்களைச் சாய்த்து எமது நானாவிதச் சொந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்து மரவளத்தை நாசமாக்கினோம். ''நிஷா'' என்ற பெரும் புயல் வந்து மிஞ்சி நின்ற பெரு விருட்சங்கள் உட்பட குடாநாட்டின் மரவளத்தை குறிப்பிட்ட வீதம் சரித்துப் போயிற்று.

இத்தகைய நலிவுறு நிலையில், குடாநாட்டில் மரவளர்ப்பில் ஈடுபாடு காட்ட இங்குள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் முன்வந்திருப்பது, காலத்தின் தேவையறிந்து தக்கதருணத்தில் செய்யப்படும் பெரும் சேவையாகும்.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மக்கள் இயக்கம். பல தசாப்தங்களுக்கு முன்னர் அவை ஆற்றிய சேவைகள் குடாநாட்டு மக்களுக்குப் பல வகைகளிலும் பேருதவியாக அமைந்தன என்பது நற்பதிவுகள். ஏனைய துறைகளைவிட மக்களுடன் ஒன்றித்தவை. கிராம மட்டத்தில் விவசாயம், மீன்பிடி, கைத்தொழில் என்று பல துறைகளிலும் மக்கள் நலன்நாடி மக்களால் இயக்கப்படுகின்றவை.

அதே பாரம்பரியத்தில் அனுபவத்தில் கூட்டுறவு அமைப்பு குடாநாட்டின் மரவளம் பெருகுவதற்குக் கையேற்றுள்ள திட்டம் நற்பலன்களைத் தரும் என்று எதிர்பார்க்கலாம்.

இன்றே செய்மின்! நன்றே செய்மின்!! என்று ம்க்களின் பல கைகள் சேர்ந்து இம்முயற்சி நற்பயன் விளைவிப்பதாக.

# மனிதாபிமான நோக்கத்துக்கான போர்நிறுத்தத்தை இன்னும் அதிக காலத்துக்கு நீடிக்க வேண்டும்

## ஐ.நாவின் மனிதாபிமானச் செயலர் ஜோன் ஹோம்ஸ் கோரிக்கை

கொழும்பு, ஏப்.15

இலங்கை அரசு நடைமுறைப் படுத்த உள்ள மனிதாபிமான நோக்கத்திற்கான தாக்குதல் இடைநிறுத்தத்தை இன்னும் அதிக காலத்துக்கு நீடிக்க வேண்டும் என்று நாம் எதிர்பார்ப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமானப் பணிகளுக்கான பிரதி செயலாளர் நாயகம் ஜோன் ஹோம்ஸ் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் பொதுமக்களுக்கு மேலதிகமாக உதவிப் பொருள்களை எடுத்துச் செல்லலாம் எனவும் மனிதாபிமானப் பணியாளர்கள் பாதுகாப்பு வலயத்திலுள்ள நிலைமைகள் குறித்து மதிப்பீடு செய்யக்கூடியதாக இருக்கும் எனவும் அவர் கூறியுள்ளார்.

நேற்று முன்தினமும் நேற்றும் அரசாங்கம் பிரகடனப்படுத்திய 48 மணி நேர மோதல் இடைநிறுத்தத்தை தாம் வரவேற்பதாகவும் இதுபோன்ற அனைத்து வகையான மோதல் நிறுத்தங்களையும் தாம் வரவேற்பதாகவும் அவர் கூறினார்.

பொதுமக்களுக்கு ஏற்படும் அவலங்களும், மரணங்களும், காயங்களும் இதன்மூலம் நிறுத்தப்படும். இதனால் இம்முதல்கட்ட நடவடிக்கையை வரவேற்பதாக ஜோன் ஹோம்ஸ் தெரிவித்தார்.

பொதுமக்கள் சிலர் வெளியேறுவதற்கு இம்மோதல் இடைநிறுத்தம் பயன்படக்கூடும். ஆனாலும் மோதல் இடைநிறுத்தத்தின் நம்பகத்தன்மையை நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் என்றார். எனினும் இது நம்பத்தகுந்த அறிவிப்பாகவே இருக்கும் என்றும் புலிகளும் தங்கள் தாக்குதல்களை நிறுத்துவார்கள் என்றே தாம் நம்புவதாகவும் இதனால் பொதுமக்கள் உண்மையான தாக்குதல் நிறுத்தத்தை அனுபவிப்பர் - என்றும் ஹோம்ஸ் தெரிவித்துள்ளார்.

தாக்குதல்களை நடத்துவதற்கு இருதரப்பும் கனரக ஆயுதங்களைப் பாதுகாப்பு வலயம் சார்ந்த பிரதேசங்களில் பயன்படுத்தக் கூடாதெனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இத்தாக்குதல் நிறுத்தத்தைப் புலிகள் மதிக்க வேண்டும். இது அங்குள்ள பொதுமக்களுக்கு நல்ல சந்தர்ப்பம். பொதுமக்கள் வெளியேற விரும்பினால் அவர்களுக்குத் தேவையான சுதந்திரத்தை அளியுங்கள். அனைவரும் வெளியேற விருப்பமின்றி இருக்கலாம். ஆனால் அங்கிருந்து வெளியேறுவதா? இல்லையா? என்று தீர்மானிக்கும் சுதந்திரம் மக்களுக்கு வழங்கப்படவேண்டும் எனக் கூறிய ஹோம்ஸ் பொதுமக்கள் வெளியேறுவதைப் புலிகள் தடுக்கிறார்கள் என்பதற்குக் கிடைத்த ஆதாரங்கள் மிகுந்த கவலையளிப்பதாகவும் கூறியுள்ளார்.

புலிகள் பொதுமக்களை குறிப்பாக சிறுவர்களைப் பலவந்தமாகப் படைகளில் இணைத்து போர் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். இந்நடவடிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதுடன் அவர்கள் வெளியேறவும் சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

புலிகள் அதிகளவு பொதுமக்களை விடுவித்தால் அமைதித் தீர்வுக்கான பேச்சுவார்த்தைக்கு இலங்கை அரசை வற்புறுத்த ஐ.நாவுக்கும் சர்வதேச அமைப்புகளுக்கும் வாய்ப்பாக அமையும் எனவும் ஹோம்ஸ் கூறினார்.

இவ்வாண்டின் முதல் 3 மாத காலப் பகுதியில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும் இது குறித்த கரிசனைகளை தாமும் ஐ.நா செயலாளர்நாயகம் பான்கீமூனும் தெரிவித்ததாகவும், இவ்வாறான மரணங்களாலேயே மோதல் முடிவுக்கு வரவேண்டும் எனத் தாம் விரும்புவதாகவும் அவர் மேலும் கூறினார். (50-06)

# அனைத்துலக அழுத்தங்கள் வந்தாலும் கூட தாக்குதல்களை நிறுத்தப்போவதில்லை

## பாதுகாப்புச் செயலர் கோத்தபாய திட்டவட்டம்

வன்னிப் பகுதியில் படையினர் மேற்கொண்டு வரும் தாக்குதல் நடவடிக்கைகளை எந்தவொரு சந்தர்ப்பத்திலும், அனைத்துலக அழுத்தங்கள் வந்தாலும் நிறுத்தப்போவதில்லை என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ திட்டவட்டமாக அறிவித்திருக்கின்றார்.

போர் நடவடிக்கைகளை இடைநிறுத்த வேண்டும் என எந்தளவுக்குத்தான் உள்நாட்டு மற்றும் அனைத்துலக அழுத்தங்கள் வந்தாலும் கூட, பயங்கரவாதம் முழுமையாக அழித் தொழிக்கப்படும் வரையில் தாக்குதல் நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை எனவும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

இரண்டு நாள்களுக்கு தாக்குதல் நடவடிக்கைகளை மட்டுப்படுத்துமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ படையினருக்கு அறிவித்திருப்பதாக வெளியான செய்திகள் தொடர்பாகக் கேட்ட போதே கோத்தபாய ராஜபக்ஷ இவ்வாறு கூறியிருக்கின்றார்.

கோத்தபாயவின் இந்தக் கருத்துக்கள் பிரபல சிங்கள தொலைக்காட்சிச் சேவையான தெரணவின் செய்திச் சேவையில் நேற்று முன்தினம் ஒளிபரப்பப்பட்டது.

இரண்டு நாள்களுக்கு தாக்குதல்கள் இடைநிறுத்தப்படும் என அரசாங்கம் அறிவித்திருந்த போதிலும் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் கடுமையான தாக்குதல்கள் வன்னியில் மக்கள் வசிக்கும் பாதுகாப்பு வலயப் பகுதிகளை நோக்கி நடத்தப்பட்டிருக்கின்றது என இணைத்தள செய்திகள் தெரிவித்தன.

# தூதரகம் தாக்கப்பட்டமைக்கு நோர்வே மன்னிப்புக் கோரியது

நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் அமைந்துள்ள இலங்கைத் தூதரகம் தாக்கப்பட்ட சம்பவத்தையிட்டு அந்த நாட்டு அரசாங்கத்திடம் மன்னிப்புக் கோரியுள்ள நோர்வே அரசு, சம்பவத்தை வன்மையாகக் கண்டித்துள்ளது.

இதனைக் கொழும்பில் உள்ள நோர்வேத் தூதுவர் கடந்த ஞாயிற்றுக் கிழமை இலங்கை அரசுக்கு அறிவித்திருந்தார்.

நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் போராட்டத்தில் ஈடுபட்ட தமிழ் மக்கள் இலங்கைத் தூதரகத்தைத் தாக்கியிருப்பதையிட்டு நோர்வே அரசாங்கம் தனது கண்டனத்தையும் தெரிவித்துள்ளது.

# அரசாங்கத்தின் போர் இடை நிறுத்தம் நிரந்தரமாக நீடிக்கப்பட வேண்டும்

## பிரித்தானியா வலியுறுத்து

லண்டன் ஏப்.15

இலங்கை அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள 48 மணி நேர யுத்த இடை நிறுத்தம் நிரந்தரமாக நீடிக்கப்பட வேண்டுமென பிரித்தானிய அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் டேவிட் மில்பாண்ட் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரோஹித்த போகொல்லாகமவுடன் நடத்திய தொலைபேசி உரையாடலின் போது இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் இழப்புக்களை தவிர்க்கும் முதல் கட்ட நடவடிக்கையாக இந்த யுத்த நிறுத்த அறிவிப்பை தாம் நோக்குவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். 48 மணிநேர யுத்த இடை நிறுத்த அறிவிப்பின் பின்னர் மீண்டும் யுத்தம் ஆரம்பக்கப்பட்டால் அது ஒரு துயரமான நிலையாகவே நோக்கப்படவேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அப்பாவிப் பொதுமக்களை அழிவிலிருந்து பாதுகாக்க வேண்டுமாயின் யுத்த நிறுத்த காலம் மேலும் நீடிக்கப்பட வேண்டும் என அவர் குறிப்பட்டுள்ளார்.

இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் சர்வதேச சமூகம் காத்திரமான பங்களிப்பை வழங்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (50)

# அனலைதீவு, எழுவைதீவு பகுதிகளுக்கு மின்விநியோகத்தை அமைச்சர் ஆரம்பித்தார்

யாழ்ப்பாணம், ஏப்.15

அனலைதீவு மற்றும் எழுவைதீவு பிரதேசங்களுக்கு நேற்று முன்தினம் மின்விநியோகம் வழங்கப்பட்டுள்ளது.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்த மின்விநியோகத்தை ஆரம்பித்து வைத்தார்.

இது தொடர்பாக அமைச்சு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:

அனலைதீவு மற்றும் எழுவைதீவு மக்களின் நீண்டகால கோரிக்கையான மேற்படி மின்விநியோகம் தொடர்பில் கூடிய அக்கறை எடுத்துவந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் அப்பிரதேசங்களுக்கு நேரில் விஜயம் செய்து மின்சார விநியோகத்தை ஆரம்பித்து வைத்ததுடன் அப்பகுதிகளில் பல்வேறு இடங்களுக்கு விஜயம் செய்து அப்பகுதிகளில் நிலவும் குறைபாடுகள் மற்றும் தேவைகளையும் ஆராய்ந்துள்ளார்.

எழுவைதீவு பகுதியில் மின்விநியோகத்தை ஆரம்பித்து வைத்ததன் பின்னர், அமைச்சர் தனது பன்முகப் படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டினூடாக நிர்மாணிக்கப்பட்டுள்ள எழுவைதீவு புனித தோமையார் கடற்றொழிலாளர் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க கட்டடத்தையும் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார்.

மின்விநியோகத் திட்டத்தை ஆரம்பித்து வைத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றுகையில், வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் ஆரம்பமே இத்திட்டம் என்றும் எதிர்வரும் காலத்தில் ஏனைய அபிவிருத்தித் திட்டங்களும் மக்கள் மேம்பாட்டு வேலைத்திட்டங்களும் இப்பகுதிகளில் முன்னெடுக்கப்படவுள்ளன என்றும் தெரிவித்தார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வடக்கின் அபிவிருத்தியில் அதிக கவனம் செலுத்தி வருவதை எடுத்துக் கூறியதுடன், பொதுமக்களின் பங்களிப்புடன் இவ்வனைத்துப் பணிகளையும் நிறைவேற்றுவோம் என்று உறுதியளித்தார் என உள்ளது. (அ-1)

## நாளை

| | |
|---|---|
| சித்திரை 3 | 16.04.2009 |
| | வியாழக்கிழமை |
| திதி: | சப்தமி |
| | பி.இ 05.17வரை |
| நட்சத்திரம்: | பூராடம் |
| | பி.இ 4.14 வரை |
| சுபநேரம்: | 07.34 - 09.01 |
| ராகுகாலம்: | 01.34 - 03.04 |

## அமுதாப் மரணம்

விடுதலைப் புலிகளின் சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படைத் தளபதி லெப்.கேணல் அமுதாப் என்றழைக்கப்படும் சிதம்பரப்பிள்ளை சிவநாயகம் (பிரபு) கடந்த 31ஆம் திகதி மரணமடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தைச் சொந்த முகவரியாகக் கொண்ட அமுதாப், கிளிநொச்சி உதயநகரில் தற்காலிகமாக வசித்து வந்திருந்தார்.

திலகாவின் துணைவரான இவர் சுடர் என்கின்ற ஒரு பிள்ளையின் தந்தையுமாவார் என்று 'தமிழ்வின்' இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது. (50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுருக்கெழுத்துக் கழகத்தில் புதிய வகுப்புக்கள்

யாழ்ப்பாணம், ஏப்.15

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் ஏற்பாட்டில் புதிய வகுப்புக்கள் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு மேற்படி கழகத்தில் நடைபெறவுள்ளன.

இந்தக் கழகத்தில் தமிழ் சுருக்கெழுத்து, ஆங்கில சுருக்கெழுத்து, கணனி, ஆங்கில வகுப்பு, தமிழ் தட்டச்சு, ஆங்கில தட்டச்சு, மொழித்திறன், சிங்கள வகுப்பு ஆகிய வகுப்புக்களே ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த வகுப்புக்களுக்கான மேலதிக விவரங்களையும், விண்ணப்பப் படிவத்தினையும் கழகத்தில் வார நாள்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (50-204)


## எட்டாம் ஆண்டு நினைவலைகள்

மண் மகிழ மனம் நெகிழ

04 . 04 . 1970

13 . 05 . 2001



அமரர்

## சுப்பிரமணியம் சதீஸ்குமார்

திதி: ஷஷ்டி 15.04.2009

நெஞ்சினிலே நினைவு முகம்
நினைவில் தெரிவது ஆசைமுகம்
ஒருயிர் என்று வாழ்ந்தவனே நீ!
ஓடி ஒழிந்தது தெரியவில்லை
இன்னுயிர் என்று வாழ்ந்தவனே - உன்துயர்
எட்டாண்டுகள் சென்றும் மாறவில்லை
புத்துயிர் மூலம் ஒரு வாரிசாக நீ வந்திங்கே பிறக்காயோ.

உங்கள் பிரிவால் துயருறும்: அப்பா - வி.சுப்பிரமணியம், அம்மா - சு.சித்திரா.
தங்கைமார் - த.சதீஸ்வரி, ஈ.சதீஸ்கலா (சுவிஸ்), சு.சதீஸ்குமாரி.
தம்பி - சு.சதீஸ்வரன் (தஞ்சாவூர் பல்கலைக்கழகம்).
அத்தான்மார் - ஆ.தங்கராசா, இ.ஈஸ்வரன் (சுவிஸ்), த.சுகுணன்.
மருமக்கள் - த.சரிதா, ச.சதீஸ்குமார், அச்சரா, ஈ.சாஜித்திரா, ஈ.அம்பிறித்தா, த.சாகித்தியன்.
மைத்துனி - ச.யாழினி (தஞ்சாவூர் பல்கலைக்கழகம்).

வல்லியாவத்தை, கரணவாய் மேற்கு, கரவெட்டி



# COMPUTER EXPRESS

#167, Kasthuriyar Rd, Jaffna
Branch : #07, Science Center Road, Kodikamam Rd, Nelliyadi
Phone : 021 2228250 / 0777222422

மாபெரும் புலமைப்பரிசில்திட்டம் – 2009 80% OFF

அனைத்துக் கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

**Diploma in Microsoft Office** 3 Months 1500/=

**Diploma in Desktop Publishing** 4 Months ~~10000~~ 2000/=

**Diploma in Web Page Designing** 3 Months ~~10750~~ 2150/=

**Diploma in Graphic Designing** 4 Months ~~10750~~ 2150/=

**Diploma in Hardware Engineering** 3 Months ~~10000~~ 2000/=

**Diploma in Auto CAD** 3 Months ~~10000~~ 2000/=

**Diploma in Accounting Package** 3 Months ~~10750~~ 2150/=

**Diploma in Computer Science** 4 Months ~~10750~~ 2150/=

**Honors Diploma in Computer Science** 3 Months ~~13000~~ 2600/=

**50% Off Advance Courses**

Dip. in. Multimedia 2750
Dip. in. Video Editing 3250

Computer Express ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும் சர்வதேச தரம்வாய்ந்த சான்றிதழ்கள் வரையறையற்ற செய்முறைப்பயிற்சி.

April 30ஆம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்துகொள்ளவும்.

யாழ்நகரில் ஆரம்பம்
Batch I: 17/04/2009 -9AM -3PM
Batch II: 18/04/2009 -9AM
Batch III: 19/04/2009
Batch IV: 20/04/2009 -3PM

நெல்லியடியில் ஆரம்பம்
Batch I: 16/04/2009 -10AM
Batch II: 18/04/2009 -10AM
Batch III: 19/04/2009 -10AM
Batch IV: 21/04/2009 -10AM


## இடம்பெயர்ந்தோருக்கான மார்ச், ஏப்ரல் மாத இலவச உலருணவு விநியோகம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப்.15

இடம்பெயர்ந்த மக்களுக்கான மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான இலவச உலர் உணவு விநியோகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த நிவாரணத்திற்கு சிவப்பு நாட்டரிசி, கோதுமை மா, சீனி, பருப்பு, போன்ற பொருள்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப விநியோகிக்கப்படும் பொருள்களின் விவரம் வருமாறு;

| | | 1 அங்கத்தவர் | | 2 அங்கத்தவர் | | 3 அங்கத்தவர் | | 4 அங்கத்தவர் | | 5 அங்கத்தவர் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பொருள் | விலை | அளவு | பெறுமதி | அளவு | பெறுமதி | அளவு | பெறுமதி | அளவு | பெறுமதி | அளவு | பெறுமதி |
| சிவப்பு நாட்டரிசி | 58.50 | 5.550 | 324.68 | 11.850 | 693.23 | 13.900 | 813.15 | 17.150 | 1,003.28 | 22.900 | 1,339.65 |
| கோதுமைமா | 59.20 | 2.000 | 118.40 | 4.000 | 236.80 | 8.000 | 473.60 | 8.000 | 473,60 | 10.000 | 592.00 |
| சீனி | 73.67 | 2.000 | 147.34 | 3.000 | 221.01 | 4.000 | 294.68 | 6.000 | 442.02 | 6.000 | 442.02 |
| பருப்பு | 161.50 | 0.500 | 80.75 | 0.500 | 80.75 | 0.600 | 96.90 | 0.600 | 96.90 | 0.900 | 145.35 |
| வழங்கியது | | | 671.17 | | 1231.79 | | 1678.33 | | 2015.80 | | 2519.02 |
| வ.வேண்டியது | | | 672.00 | - | 1232.00 | - | 1680.00 | - | 2016.00 | - | 2520.00 |
| மீதி | | | 0.83 | - | 0.21 | - | 1.67 | - | 0.20 | - | 0.98 |

# அரச வைத்தியர்கள் மூலம் புலிகள் பொய்ப் பிரசாரம்

### சுகாதார அமைச்சர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப்ரல் 15

அரச வைத்தியர்களைக் கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் சர்வதேச ரீதியில் போலிப் பிரசாரங்களை முன்வைத்து வருகின்றனர் என அரசு குற்றஞ்சாட்டியுள்ளது.

மோதல் தவிர்ப்பு வலயத்தில் எறிகணைத் தாக்குதல் நடத்தப்படுவதாக கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு சுகாதாரப் பணிப்பாளர்களினால் வெளியிடப்பட்ட அறிக்கை உண்மைக்குப் புறம்பானவை என சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். அரச படையினரால் நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதல்களினால் சிவிலியன்கள் படுகொலை செய்யப்பட்டனர் எனக் குறித்த சுகாதாரப் பணிப்பாளர்கள் தகவல் வெளியிட்டுள்ளமை ஏற்றுக் கொள்ள முடியாதது என சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் விடுதலைப் புலிகள் அமைப்பின் அழுத்தம் காரணமாகவே வைத்தியர்கள் இவ்வாறான அறிக்கைகளை வெளியிடுகின்றனர் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த அரச வைத்தியர்கள் காயமடைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கே தற்போது சிகிச்சையளித்து வருகின்றனர் என்று சுகாதார அமைச்சு தனது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளது. (சி)

### விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டன

வேலணை, ஏப்.15

வேலணை பிரதேச செயலக பிரிவிலுள்ள விவசாய சம்மேளனங்கள் மூலம் புங்குடுதீவுப் பகுதியைச் சேர்ந்த 180 குடும்பங்களுக்கும், வேலணைப் பகுதியைச் சேர்ந்த 200 குடும்பங்களுக்கும் போரூட் நிறுவனத்தால் விவசாய உபகரணங்களும், மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன. (50-167)


**தோட்டக் காணி விற்பனைக்கு**

அளவெட்டி டச்சுறோட்டில் 8 பரப்பு தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு
தொடர்பு:
காலை 9 மணியிலிருந்து மாலை 6 மணிவரை
2447436

**The Royal College Of Jaffna**

சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயில
By ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி Dip/CER in English and Science (london) 426, (302) K.K.S. வீதி, யாழ்ப்பாணம், பிளாக் வீதி, சங்கானை.


## கண்ணீர் ஆஞ்சலி

எமது கல்வி வலய நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் திரு.இ.தேவானந்த் அவர்களின் பாசத்திற்குரிய தகப்பனார் **அமரர் நடராஜா - இரத்தினம்** அவர்கள் காலமானதால் துயருற்றிருக்கும் அவருக்கும், அவர்தம் குடும்பத்தினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

கணக்காளரும் ஏனைய உத்தியோகத்தர்களும்
நிதிக்கிளை, வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்

பழைய மாணவர் சங்கம், யா/ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்

## வருடாந்தப் பொதுக் கூட்டமும் ஒன்று கூடலும்

எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டமும் ஒன்றுகூடலும் எதிர்வரும் 19.04.2009 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு ஆரம்பமாகி பின்வரும் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

★ "மழவராயர் கந்தையர் மும்மணிமாலை" நூல் வெளியீட்டு விழா
ஆக்கியோன் - சைவப்புலவர் திரு.இ.செல்லத்துரை (முன்னாள் ஆசிரியர்)
★ மதிய போசனம்
★ பொதுக் கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும்

இந்நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்குமாறு பழைய மாணவர்களையும் நலன்விரும்பிகளையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திரு.வ.ஆறுமுகம், தலைவர்.
திரு.க.இராஜதுரை, செயலாளர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கல்விச்சாலைக் காட்சிகள்



ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் இலவச பாடப்புத்தகங்களை 2008 இல் பேணிப் பாதுகாத்த ஒரு மாணவிக்கு சண்டிலிப்பாய் கோட்டக் கல்வி அலுவலர் வே.சிறீதரன் சான்றிதழ் வழங்குவதையும் அருகில் அதிபர் த.சிவகடாட்சம், ஆசிரியர் திருமதி ஞானேந்திரன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.
*(படம்:நவாலிச் செய்தியாளர்)*



சுன்னாகம் றொட்டறக்ட் கழகத்தினரால் அண்மையில் மானிப்பாய் அரும்புகள் முன்பள்ளிச் சிறார்களுக்கு கற்றலுக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட சுன்னாகம் றொட்டறக்ட் கழக உறுப்பினர்களையும் கற்றல் உபகரணங்கள் பெற்றுக் கொண்ட மாணவர்களையும் படத்தில் காணலாம். *(படம்:நேசன்)*



காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்தில் ஊடகக் கல்வி அறிமுகவிழா அண்மையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் ஊடக வளங்கள் பயிற்சி மையப் பணிப்பாளருமான பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். அருகில் கல்லூரி அதிபர் ஆ.குமரேசமூர்த்தி, ஆசிரியர் ந.கணேசமூர்த்தி ஆகியோர் உள்ளனர். *(50-250)*




தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினரின் மரம் நடுகைத் திட்டம் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது.

மந்துவில் றோ.க.த.க.பாடசாலையின் அதிபரிடம் கழகத் தலைவர் லயன் [illegible] முத்து மரக்கன்றுகளைக் கையளிப்பதையும் அருகில் கழக உறுப்பினர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம். *(50-207)*

# யாழ்.பிரதேச செயலக கலை இலக்கியப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஏப்.15

தேசிய கலை இலக்கியப் பெருவிழாவையொட்டி யாழ். பிரதேச செயலகத்தினரால் கலை, இலக்கியப் போட்டிகள் நடத்தப்பட்டன. அவற்றின் முடிவுகள் வருமாறு:

**கட்டுரை-கனிஷ்ட பிரிவு**

முதலாம் இடம் ராஜீவ் சிவப்பிரகாசம் (யாழ்.மத்திய கல்லூரி), இரண்டாம் இடம் றெமிலா ஜெயசீலன்(திருக்குடும்பக் கன்னியர் மடம்), மூன்றாம் இடம் மாதங்கி பாஸ்கரன்(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

**கட்டுரை-சிரேஷ்ட பிரிவு**

முதலாம் இடம் ரூபினி சுந்தரலிங்கம் (வேம்படி மகளிர் கல்லூரி), இரண்டாம் இடம் ஞா.மனோஜ்(கொழும்புத்துறை இந்து ம.வி), மூன்றாம் இடம் டினோஜா திலகேந்திரராஜா(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

**கவிதை-கனிஷ்ட பிரிவு**

முதலாம் இடம் கி.மேரி கொலஸ்ரினா (கொழும்புத்துறை இந்து ம.வி), இரண்டாம் இடம் நீலுகா மதியாபரணம் (கொழும்புத்துறை இந்து ம.வி), மூன்றாம் இடம் ஆர்.அனுராஜ் (சென் சேவியர் ஆண்கள் பாடசாலை).

**கவிதை-சிரேஷ்ட பிரிவு**

முதலாம் இடம் வேஜின் தர்சிகா ஜோர்ஜ் அருந்தவநேசன் (யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மடம்), இரண்டாம் இடம் ஜே.ஜோன்சன் திவ்வியானந்(புனித பத்தி ரியாரியார் கல்லூரி), மூன்றாம் இடம் கி.மேரி டிலோஸ்ரினா(கொழும்புத்துறை இந்து ம.வி).

**கவிதை-திறந்த பிரிவு**

முதலாம் இடம் சூசைப்பிள்ளை ஜேசுராசா(26, ஆனந்தன் வடலி வீதி, கொழும்புத்துறை), இரண்டாம் இடம் தெய்வீக பாலன் சந்திரகுமார்(129, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்), மூன்றாம் இடம் நோ. பெ. றொஷான்(60,கடற்கரை வீதி, பாஷையூர்).

**சிறுகதை திறந்த பிரிவு**

முதலாம் இடம் ஜோர்ஜ் ஜெஸ்ரின்(28/1, ஏ.வி.றோட், கொழும்புத்துறை), இரண்டாம் இடம் முத்தையா கனகசபை (18, சாமியார் வீதி, கொழும்புத்துறை).

**பாடலாக்கம்**

முதலாம் இடம் ஜோர்ஜ் ஜெஸ்ரின்(28/1, ஏ.வி.றோட், கொழும்புத்துறை), இரண்டாம் இடம் சந்திரகுமார்(129, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்).

**சிறுகதை-சிரேஷ்ட பிரிவு**

முதலாம் இடம் ஜெ.ஜோய் மாதவன் (புனித பத்திரியாசிரியர் கல்லூரி), இரண்டாம் இடம் ம.கோமளராஜ்(புனித பத்திரிசியார் கல்லூரி), மூன்றாம் இடம் அ.கனிஷ்ரன் (புனித பத்திரிசியார் கல்லூரி).

**கவிதை(ஆங்கிலம்)**

முதலாம் இடம் ஜே.எப்.றெஜிகுமார் (யா/புனித பத்திரியாசிரியார் கல்லூரி), இரண்டாம் இடம் எம்.ஆர்.குறோசீலன் (யா/புனித பத்திரிசியார் கல்லூரி), மூன்றாம்இடம் ஜே.ஜோய் மாதவன்(யா/புனித பத்திரியாசிரியார் கல்லூரி).

# சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கென வழங்கப்பட்ட கடன்களை 30 பயனாளிகள் மீளச் செலுத்தவில்லை

## பருத்தித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் கவலை

வடமாரட்சி,ஏப்.15

பருத்தித்துறை மக்கள் வங்கிக் கிளையினால் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கென வழங்கப்பட்ட கடனைப் பெற்றுக்கொண்ட பயனாளிகள் 30 பேர் இதுவரை கடனைச் செலுத்தவில்லை என அதன் முகாமையாளர் மு.சிவநேசன் கவலை வெளியிட்டுள்ளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு வசதி வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்கும் முகமாக பருத்தித்துறை மக்கள் வங்கிக் கிளை கடனை வழங்கியிருந்தது. இந்தக் கடனைப் பெற்றவர்களில் பொருளாதார வசதி குறைந்தவர்களை விட பொருளாதார வசதி கூடிய சுமார் 30 பயனாளிகள் இதுவரை கடனைச் செலுத்தவில்லை.

இதன் காரணமாக மேலதிக கடனை வழங்க முடியாத நிலையில் இருப்பதாகவும், கடனைச் செலுத்தாத பயனாளிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் [illegible] தெரிவித்துள்ளார்.

இதேவேளை கட[illegible]னப் பெற்று திருப்பிச் செலுத்தாத பயனாளிகளின் விவரங்களைப் பிரதேச செயலகத்திற்கு சமர்ப்பிக்கும்படி பருத்தித்துறைப் பிரதேச செயலாளர் இ.வரதீஸ்வரன் கேட்டுள்ளார். (04-236)

# காணி அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.15

அம்பன் அ.மி.த.க.பாடசாலையின் வளர்ச்சிக்கென காணிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

பாடசாலைக்கு காணி வழங்கும் வைபவம் அண்மையில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் பொ.சிவராசா தலைமையில் நடைபெற்றது.

இந்த வைபவத்தில் காணிகளை சி.செல்லத்துரை, தி. அன்னலட்சுமி, செ.தெய்வானை ஆகியோர் நன்கொடையாக வழங்கினர். (04-78)

# ஜீ.சீ.ஈ.சாதாரணதரப் பரீட்சை; மேலும் சில பாடசாலைகளின் முடிவுகள்

யாழ்ப்பாணம், ஏப்.15

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜீ.சீ.ஈ (சாதாரண) தரப் பரீட்சை முடிவுகளை மேலும் சில பாடசாலை அதிபர்கள் ''உதயனுக்கு'' அனுப்பி வைத்துள்ளனர்.

அந்த முடிவுகள் வருமாறு:-

**யூனியன் கல்லூரி**

கு.யசோதரன்-7ஏபிசி, வி.கம்சாயன்-7ஏபிஎஸ், த.குசேலரமணன்-7ஏபிஎஸ், வி.சுரேன்-7ஏபிஎஸ், இ.டிசானி-6ஏ3பி, வி.ஜெயந்தன்-6ஏ3பி, து.தசாங்கன்-6ஏ2பிஎஸ், ரா.தரணிதரன்- 6ஏபிஎஸ், கா.கவிவர்ணன்-5ஏ2பிசி, செல்வி. சி.ஹர்ஜினி-5ஏ2பிசிஎஸ்.

**கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்**

சோ.மோகனேந்திரன்-4ஏ2பி2சி, ச.ஜனார்த்தனன்-3ஏ4பிசி, சி.லக்ஸ்மப்பிரியா-3ஏபி4சி, த.ஐங்கரன்-3ஏபி3சிஎஸ், கே.கிருஜாழினி-2ஏ5சிஎஸ், ச.கவிராஜன்-ஏபிசி4எஸ், சு.ஜீவாஸ்கரன்-ஏபி4சி2எஸ், க.லிங்கேஸ்வரன்-ஏ3சி4எஸ், த.அகிலா-ஏபி2சி3எஸ், ந.கோபிதன்-பி2சி4எஸ், ரி.ரொசில்டா-3சி5எஸ்.

**நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்**

பொ.அபித்தா-8ஏபி, லோ.அனுதர்சன்-6ஏ2பிசி, வி.பிரியங்கா- 6ஏ2பிசி, மு.தர்சன்-4ஏ4பி, அ.ஜேம்ஸ் பேகர்- 5ஏ3பிஎஸ், லூ.றெனோசன்- 4ஏ3சி எஸ், ச.ஆர்த்தியா-4ஏபி3சிஎஸ், ரா.ராகவி- 4ஏ4சிஎஸ், க.பிரதீப்-7ஏ2பி, அ.அரிகரன்-6ஏ2பிஎஸ், ப.சாதனா-4ஏ3 [illegible], [illegible].ஆசா- 4ஏ2பி2சிஎஸ்.

**[illegible] சிவகுரு வித்தியாலயம்**

பி.பிரதீபா-4ஏ2பி2சிஎஸ், வி.வினோதிகா-2ஏ5பிசிஎஸ், ச.உதயசங்கர்- 3ஏ2பி3சிஎஸ், இ.தனுஷியா-3ஏ4சி2எஸ், இ.சபேஸ்வரன்-ஏபி2சி3எஸ், மு.நரேன்--ஏ4சி4எஸ், ஜெ.ஜெகரூபன்-ஏ4சி3எஸ், செ.துஜேந்திரன்-ஏ2சி5எஸ்.

**வேலணை மத்திய கல்லூரி**

கே.முகுந்தகுமார்-5ஏ2பிசிஎஸ், கே.மகிந்தன்-4ஏபி3சி, ஜீ.கபூரன்- 3ஏ3பி2சி, ரி.யனோஜ்-3ஏபி4சி, ஆர்.ஜிகிதா-2ஏ2 பி4சி, ரி.பவதாரணி-2ஏ3பி2சிஎஸ், கே.துஷ்சியந்தன்-2ஏ3பிசிஎஸ், எஸ்.தர்சிகா-2ஏபி 2சி3எஸ், ஆர்.சிந்துகா-2ஏபி2சி2எஸ், எஸ்.நிரஞ்சனி-2ஏபிசி4எஸ், எஸ். கம்ஷா-2ஏ2சி4எஸ், ரி.உசாந்தினி-2ஏ2சி4எஸ், கே.நிர்மலா-2ஏசி5எஸ், வை.சயந்தினி-2ஏ3சி2எஸ். (50-9-86)

# புகையிலை அறுவடை மழையால் பாதிப்பு

கோப்பாய்,ஏப்.15

கடந்த சில தினங்களாகப் பெய்த மழையினால் வலி.கிழக்கில் புகையிலை அறுவடை பாதிப்படைந்துள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை கடந்த வாரங்களில் அறுவடையாகிய புகையிலைகளும் மழையினால் கடும் பாதிப்புக்குள்ளாகியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இப்பகுதியில் புகையிலைக் கன்று ஒன்று 60 ரூபாவரை கொள்வனவு செய்யப்பட்டு வருவதாகவும் எதிர்வரும் வாரங்களில் இதன் விலை மேலும் வீழ்ச்சி அடையலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (04-72)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல் ஆரோக்கியத்துடன் வாழ்வதற்கு விற்றமின் "டி" (D)

நல்ல ஆரோக்கிய வாழ்விற்கு நாள் ஒன்றுக்கு 200-600 சர்வதேச அலகு விற்றமின் "டி" சத்து உள்ளெடுக்கப்பட ல் அவசியம் என இங்கிலாந்து சுகாதாரத் திணைக்களம் ஆலோசனை வழங்கி யிருக்கிறது. குறிப்பாக 70 வயதிற்கு மேற்பட்ட நபர்கள் அதிகளவு விட்டமின் "டி" சத்தை உள்ளெடுத்தல் மிக அவசியம் என அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. பால், வஞ்சூர மீன், சூடை, மாக்கரல் மீன் எண்ணெய் முதலியன நல்ல விற்றமின் "டி" சத்து வளங்களாகும். 85 கி.கி.சூடை மீனில் 200 அலகு விற்றமின் "டி" இருப்பதாகக் கணிப் பிடப்பட்டுள்ளது.

இளைஞர்களுக்கு உச்ச அளவு ஆரோக்கிய விற்றமின் "டி" 1000 அலகுகள் எனவும், வயது

## தகவல் பெட்டகம்

முதிர்ந்தவர்களுக்கு 2000 அலகுகள் எனவும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு என்பதற்கேற்ப விற்றமின் "டி" உச்ச அளவை விடக் கூடுதலாக உட்கொண்டால் வாந்திபேதி நோய், பலவீனம் மற்றும் சிறுநீரகம் பாதிப்பு ஏற்படும் வாய்ப்பு உண்டு.

நாள் ஒன்றுக்கு 1000 அலகு விற்றமின் "டி" சத்து உள்ளெடுத்து வந்தால் மார்பக, கருப்பை மற்றும் குடல் புற்றுநோய்கள் ஏற்படும் ஆபத்தை 50 சத வீதத்தால் குறைவடையச் செய்கிறது என்பது கலிபோர்னிய சந்தியாகோ பல்கலைக்கழகத்தால், 'விற்றமின் "டி" சத்தும் புற்று நோய் பாதிப்பும்' என்னும் தலைப்பில் வெளியிடப்பட்ட 63 ஆய்வு அறிக்கைகளை ஆராய்ந்து பெறப்பட்ட முடிவாகும்.

பிரித்தானியாவில் 2000 பெண்களை வைத்து நடத்திய ஆய்வில் விற்றமின் "டி" ஆரோக்கிய மட்டம் உடல் முதிர்ச்சியடைவதை மந்தப்படுத்துகிறது எனவும், முதுமை தொடர்பான பிணியிலிருந்து தகுந்த பாதுகாப்பளிக்கிறது எனவும் கண்டறியப்பட்டிருக்கிறது.

மேலும் விற்றமின் "டி" சத்து உடல் நோயெதிர்ப்பு சக்தியை மிதமாக்குகின்றதென்றும், நீரிழிவு, வாதரோகங்கள் போன்ற பிணிகளுக்கு சிகிச்சையளிப்பதில் பெரும் உதவி புரிகின்றது எனவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.★



எஸ்.பேராசிரியன்.

# உலகம் வெப்பமடைவதன் விளைவு எதிர்பார்த்ததைவிடத் தீவிரமானது



எதிர்பார்த்ததைவிட உலக வெப்ப முறுதலால் ஏற்படும், சுற்றுச்சூழல்களுக்குப் பாதகமாக அமையும் விளைவுகள் தீவிரமானதாக இருக்கும் என்று உலக வெப்பமடைதல் தொடர்பான ஆய்வுகளில் ஈடுபட்டுள்ள முதன்மை விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

2000-2007 வரையான காலப்பகுதியில் திரட்டப்பட்ட புதிய தரவுகளின் படி, வளி மண்டலத்தில் நிகர அளவில் அதிகரித்து வரும் காபனீரொட்சைட் மற்றும் மெதேன் வாயுக்களை கட்டுப்படுத்தப் போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படாமையினால் இந்த நிலை தோன்றி இருக்கிறது என்கின்றனர் விஞ்ஞானிகள்.

குறிப்பாக இந்தியா மற்றும் சீனா போன்ற நாடுகள் பெருமளவு சுவட்டு எரிபொருள்களை மின்சாரத் தேவைக்காக எரித்து வருகின்றன. இச் செயற்பாடு அதிகளவு காபனீரொட்சைட் வளிமண்டலத்துக்குள் வெளித்தள்ளுகின்றது.

அயன மண்டலக் காடுகள் உலர்ந்து வருகின்றன இதனால் காட்டுத்தீ போன்றவை ஏற்பட்டு பெருமளவு தாவரங்கள் அழிக்கப்படுகின்றன. பூமி மேற்பரப்பில் சராசரி வெப்பநிலை அதிகரித்திருப்பதால் துருவப் பனிப் படிவுகளும் விரைந்து உருகி வருகின்றன. அத்துடன் வெள்ளப் பெருக்கை ஏற்படுத்தும் சூறாவளிகளும் அடிக்கடி ஏற்பட வாய்ப்பு உருவாக்கப்படுகிறது என்கின்றனர் விஞ்ஞானிகள்.

கு.கனலயம்சன், சண்டிலிப்பாய்.





# ஜூரி சபைமுன் வழக்கு விசாரணை எப்போது அமுலுக்கு வந்தது?

ஜூரிகளின் முன்னால் வழக்குகள் விசாரிக்கப்படுவதென்பது இன்று மனிதர்களின் மிகப் புனிதமானதும் இயற்கையானதுமான ஒரு உரிமையாகக் கருதப்படுகின்றது. ஆனால் இந்த உரிமையானது அங்கீகரிக்கப்படுவதற்கு வெகு நெடுங்காலம் பிடித்துள்ளது.

நோர்மன்கள் 1066 ஆம் ஆண்டில் இங்கிலாந்தைக் கைப்பற்றியபோது ஒருவித 'ஜூரி' முறையை அவர்கள் ஆரம்பித்திருந்தார்கள். ஆனால் ஜூரி சபையில் இருப்பவர்கள் சாட்சிகளாக விசாரணையின்போது அமர்ந்திருப்பதில்லை. கிடைக்கும் உண்மைகளைப் பொறுத்து அவர்களே தங்கள் மனதில் முடிவுகளை எடுத்தாக வேண்டும்.

20 ஆம் நூற்றாண்டில் 11 ஆம் ஹென்றியின் ஆட்சிக் காலத்தில்தான் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டது.





அந்த அடிப்படையில்தான் நம் காலத்தில் ஜூரி சபைகள் அமைக்கப்பட்டு வழக்கு விசாரணைகள் நடைபெறுகின்றன.

நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படும் சாட்சியங்களை நேரில் பார்த்தும், கேட்டும் ஜூரி சபையினர் வழக்கின் முடிவைத் தீர்மானிக்க வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது.

ஜூரி சபையில் 12 பேர் இருந்து சாட்சிகளின் சாட்சியங்களை அவதானிப்பார்கள். சட்டத்தரணிகளின் விவாதங்களையும் கேட்பார்கள். பின் நீதிவானின் கருத்துக்களுக்கும் செவிமடுப்பார்கள். பின்னர் தமது அறைக்குத் திரும்பி தமது [illegible]புத் தொடர்பாக ஒரு முடிவினை எடுப்பார்கள். - [illegible]

## கவிதை ஊற்று!

நீ-----
கனவுகளின் மொழியை
கற்றுக் கொள்
கவிதை வரும்!

காதலை வென்றுபார்
கவிதை வரும்!
வறுமையில் உழன்று பார்
கவிதை வரும்!
இயற்கையை ரசித்துப் பார்
கவிதை வரும்!
இல்லையேல்
காதலில் தோற்றுப் பார்
கவிதை பொங்கிவரும்!!!

ந.ராஜி, கொடிகாமம்.

## இடிதாங்கும் இதயங்கள்

மண்ணில்
மௌனமாய் கண்ணீர் சிந்தும்
மானுடமே!
உறவுகளைப் பிரிந்து
உடைமைகளை இழந்து
நாதியற்று அலைகின்ற
நம்மவரின்
கண்ணீர்த் துளிகள்
காத்திரமானவை
விடிவுண்டு ஒருநாள்
காத்திருங்கள் அதுவரை

ரீ.ரேகா, மாவையூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சையில் சிறப்பான பெறுபேறுகளை எட்டி யாழ். கல்வித்துறைக்கு புகழ் சேர்த்த மாணவர்கள்!

அண்மையில் வெளியாகிய ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை முடிவுகளில் சிறப்பான பெறுபேற்றினை அடைந்து, யாழ்.மாவட்டத்துக்கும், கல்வித்துறைக்கும் பெருமை சேர்த்த மாணவர்களின் எண்ணங்களை உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றான். அதன் இறுதிப் பகுதி இங்கு பிரசுரமாகின்றது.



## கிருஷ்ணப்பிரியா இராசேந்திரம்

பெறுபேறு: 3ஏ (புற்றளை மகா வித்தியாலயம் புலோலி)

இறைபக்தியுடனும் துணிவுடனும் கல்வி கற்றமையினாலேயே நான் மூன்று படங்களிலும் 'ஏ' தரச் சித்திபெற முடிந்தது. எனது ஆசிரியர்களும், எனது குடும்பத்தினரும், எனது நண்பர்களும் எனக்கு வழங்கிய ஒத்துழைப்புக்கு நான் நன்றி கூறாமல் இருக்க முடியாது. ஆரம்பத்தில் புற்றளை மகா வித்தியாலயத்தில் கல்வி கற்றுப் பின்னர் திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் கல்வி கற்றேன். மீண்டும் புற்றளை சித்தி விநாயகர் அருளுடன் புற்றளை மகா வித்தியாலயத்திலேயே உயர்தரக் கல்வியைக் கற்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. பரீட்சைக்குத் தோற்றிய பின்னர் அளவையியலும் விஞ்ஞான முறையும் II ஆம் பகுதி பற்றி எனக்கு கவலை ஏற்பட்டது. நான் அப்பாடத்தை சரியாக செய்யவில்லைப்போல் என்று என் மனது கூறியது. கவலைப்பட்ட வண்ணமே இருந்தேன். ஆனால் புற்றளைப் பிள்ளையார் என்னைக் கைவிடவில்லை. பெறுபேறு வந்த பின்னர் மகிழ்ச்சி அடைந்தேன். பாடசாலைக்கும், ரியூட்டறிக்கும் ஒழுங்காகச் செல்வேன். கற்கும்போது ஏற்படும் சந்தேகங்களை உடனேயே ஆசிரியர்களைக் கேட்டுத் தெரிந்து கொள்வேன். வீட்டிற்கு வந்ததும் அன்று படித்த பாடங்களைத் திருப்பிப் படிப்பேன். ஒழுங்காக நித்திரை செய்வேன். நித்திரையைக் குறைத்து என்னை வருத்தி ஒருபோதும் படித்ததில்லை. பாடசாலையிலும், ரியூட்டறியிலும் எல்லாப் பாடங்களுக்கும் 80 புள்ளிகளுக்கு மேலேயே எடுப்பேன். பாடசாலைகளில் நடத்தப்படும் போட்டிகளில் பங்கேற்பேன். எனது எதிர்காலக் கல்வியை சட்டத் துறையில் மேற்கொண்டு தலை சிறந்த சட்டத்தரணியாகத் திகழ வேண்டும் என்பதே எனது இலட்சியம்.



## அ.சுதர்சினி

பெறுபேறு: 2ஏபி (ஞானசாரியார் கல்லூரி)

நான் எனது ஆரம்பக் கல்வியை புளியங்குளம் செல்வ விநாயகர் வித்தியாலயத்தில் கற்றுக்கொண்டேன். பின்னர் உயர்கல்வியை கரவெட்டி ஞானசாரியார் கல்லூரியில் கற்றுக் கொண்டேன்.

நான் எனது உயர்தரக் கல்வியை கற்பதற்கு ஆக்கமும், ஊக்கமும் வழங்கிய எனது பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இதுதவிர எனது ஒவ்வொரு முன்னேற்ற முயற்சிகளுக்கும் தூண்டுதலாக இருந்த எனதுசகநண்பர்கள் மற்றும் உறவினர்கள்அனைவருக்கும் எல்லாவற்றுக்கும் மேலாக இறைவனுக்கும் நன்றியைக் கூறிக் கொள்கிறேன்.

நான் உயர்கல்வியை சிறப்பாக பயின்று சிறந்த பெறுபேறு பெற்றுள்ளேன். பல்கலைக்கழகப் படிப்பை முடித்தபின் இளைய தலை முறையினருக்கு சிறந்த வழிகாட்டியாக இருக்க விரும்புகிறேன்.



## கு.குணேஸ்வரி

பெறுபேறு: 2ஏசி (கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி)

நான் ஆரம்பக் கல்வியை தரம் 1 வரை மந்துவில் அ.த.க. படசாலையில் கற்றேன். பின்னர் இடம் பெயர்வின் காரணமாக ஞானாசாரியார் கல்லூரியில் 2 ஆம் தரத்தில் சேர்ந்து கல்வி கற்றேன். நான் இப்பாடசாலையில் கல்வி கற்றகாலம் முதல் இப் பாடசாலை அதிபரும், ஆசிரியர்களும் எனது கல்வி வளர்ச்சியில் பெரும் பங்காற்றினார்கள்.

உயர்தரத்தில் கலைப்பிரிவில் தமிழ், அளவையியல், வணிகபுள்ளி விவரவியல் ஆகிய பாடங்களில் 2ஏசி சித்திகள் அடைந்து பல்கலைக் கழக அனுமதியை பெறுவதற்கு இப்பாடசாலை ஆசிரியர்களும், தனியார் நிறுவன ஆசிரியர்களும், என் சக நண்பர்களும் உதவினர். அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள். எனது குடும்பம் வறுமைப்பட்ட குடும்பமாக இருந்த போதிலும் எனது கல்வித் தேவைக்கு எந்தவித சிரமமும் பாராது செலவுசெய்த எனது பெற்றோருக்கு முதற்கண் நன்றிகள். எங்களது வீட்டிலிருந்து படிப்பதற்குரிய வசதிகள் இல்லாத போது எனக்கு படிப்பதற்குரிய வசதிகளை உதவியவர்களுக்கு நன்றிகள். நான் மனம் தளரும் சந்தர்ப்பத்தில்நான் படித்துநன்றாக வரவேண்டும் என்று எனக்கு நம்பிக்கை ஊட்டும் என் சக நண்பிகளுக்கும் நன்றிகள். இவற்றிக்கு மேலாக பெரியவர்களின் ஆசீர்வாதமும், கடவுளின் துணையும் எனது இத்தகைய நிலைக்கு முக்கிய காரணம். இந்த வகையில்தாமரைக் குளத்தடி வைரவருக்கும், கலிகைக் கந்தனுக்கும் மனமார்ந்த நன்றிகள். சிறுவயது முதல் எனது இலட்சியம் நான் கல்வி கற்று எனது குடும்பத்தை நல்லநிலைக்கு கொண்டு வர வேண்டும் என்பதாகும். அது நிறை வேறப் போகின்றது என்பதை நினைக் கையில் நான் மிகவும் சந்தோஷமடைகிறேன். எதிர்காலத்தில் சிறந்த ஓர் ஆசிரியராகி ஏழை மாணவர்களுக்கு என்னால் இயன்ற உதவி செய்து கல்வி கற்பிப்பேன்.



## வ.சுமதி

பெறுபேறு: 2ஏசி (ஞானசாரியார் கல்லூரி)

நான் ஆரம்பக் கல்வியை கட்டைவேலி மெ.மி.த.க பாடசாலையில் கற்று அங்கிருந்து 6ஆம் தரம் கல்வி கற்பதற்கு ஞானாசாரியார் கல்லூரிக்கு வந்து சேர்ந்தேன். நான் வந்து சேர்ந்த நாள் முதல் கல்லூரிச் சமூகம் எமக்கு எல்லா வசதியும் செய்து தந்தது. அதற்கேற்ப ஜி.சீ.ஈ [சா/த] பரீட்சையில் சித்தி பெற்று உயர்தரத்தில் கலைப் பிரிவை தெரிவு செய்தேன். உயர்கல்வி கற்பதற்கு எமது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை சமூகம் தனியார் கல்வி நிறுவனங்கள், நண்பர்கள் அனைவரும் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்து தந்தார்கள். அவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

எனது குடும்பத்தவர் நான் நன்றாகப் படிக்க எல்லா வசதிகளும் செய்து தந்தார்கள். எனக்கு 3 சகோதரர்கள். அவர்களுக்கு பல்கலைக்கழகக் கல்வி கிடைக்கவில்லை[illegible]ால் நான் பல்கலைக் கழகம் செல்ல வே[illegible] என நினைத்துப் படித்தேன். எனது இலட்சியம் நிறைவேறி விட்டது. இதற்கு எல்லாம் வல்ல இறைவனுக்கு எனது நன்றிகளை எப்போதும் சொல்லிக் கொள்வேன். நான் எதிர்காலத்தில் இளம் சந்ததியினரை நல்வழிப்படுத்தும் ஓர் ஆசிரியராகத் திகழ்வேன் என நம்புகிறேன்.

சந்திப்பும், படங்களும்: ஓளண்யன், கணேசமூர்த்தி. 41

## அடையாளம் தெரியாத பொருள்களைக் கண்டால் உரியவர்களுக்குத் தெரியப்படுத்தி ஆபத்தினைத் தவிர்ப்போம்

### மேலதிக அரசாங்க அதிபர் அறிவுரை

அடையாளம் தெரியாத பொருள்களைக் கையாண்ட பலர் குறிப்பாக, சிறுவர்கள் கண் இழந்து, கை,கால் இழந்து, உயிரையே இழந்து போன சம்பவங்கள் பல எமது பிரதேசத்தில் நிகழ்ந்துள்ளன. எனவே அடையாளம் தெரியாத பொருள்களைக் கண்டால் அவை பற்றிய தகவல்களை கிராம சேவையாளர்களிடமோ அல்லது பாதுகாப்புப் படையினிடமோ தெரியப்படுத்துங்கள். இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி.

யுனிசெவ் நிறுவன அனுசரணையுடன் யாழ்.மாவட்ட சர்வோதயம் அமைப்பினர் சர்வதேச மிதிவெடி விழிப்புணர்வுக்கும் செயற்பாட்டிற்குமான தினத்தை ஏப்ரல் 4 ஆம் திகதி சர்வோதய மாவட்ட முதல்வர் சிவசுப்பிரமணியம் தலைமையில் திருமறைக் கலாமன்ற கலைத்தூது மண்டபத்தில் கொண்டாடினர். அதன்போதே மேலதிக அரசாங்க அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்:

யாழ் மாவட்டத்தில் பல மிதிவெடி, வெடிப்புச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. யுத்தத்தில் ஈடுபடுபவர்களே இதை விதைக்கிறார்கள். அது மறைந்து கிடந்து அதிக பாதிப்புக்களை உண்டாக்குகின்றது. யுத்தத்தோடு எந்த வித சம்பந்தமும் இல்லாத பலர் அங்கங்களை இழந்து, உயிரிழந்துபோன பல சம்பவங்கள் நேர்ந்துள்ளன. குறிப்பாக சிறுவர்கள் பலரே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளார்கள். எனவே அடையாளம் தெரியாத பொருள்களைக் கண்டால் உடனடியாகக் கிராம சேவையாளருக்கோ அல்லது படையினருக்கோ தெரியப்படுத்தி அதனால் வரும் ஆபத்துக்களிலிருந்து உங்களையும் மற்றவர்களையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள் என்றார் அவர். (04-45)

## பாய், படுக்கை விநியோகம்

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு பிளாஸ்ரிக் பாய்,படுக்கைகளை விநியோகித்து வருகின்றது.

சுமார் ஆயிரம் வரையிலான படுக்கை, பாய்களை 'யுனிசெவ்' நிறுவனம் சுகாதாரத் திணைக்களத்திற்கு அண்மையில் அன்பளிப்பாக வழங்கியிருந்தது.

இவையே தற்போது ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (04-224)

## மண்டைதீவுப் பகுதியில் குடிதண்ணீர் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம்,ஏப்.15

மண்டைதீவுப் பகுதியில் குடிதண்ணீருக்கு நிலவும் தட்டுப்பட்டை அடுத்து அப் பகுதி மக்கள் யாழ்.நகருக்கு வந்து குடி தண்ணீரைப் பெற்றுச் செல்வதாகக் கூறப்படுகின்றது.

இந்தப் பகுதியில் உள்ள நன்னீர்க் கிணறுகள் தற்போது நிலவிவரும் கடும் வறட்சியால் நீர் மட்டம் குறைந்து காணப்படுகின்றன. இதனால் தீவுப் பகுதிகளில் தண்ணீருக்குப் பற்றாக்குறை நிலவி வருகின்றது.

இதனை அடுத்து யாழ்.நகர் வரும் மண்டைதீவுப் பகுதி மக்கள் தம்முடன் குடி தண்ணீரையும் கொண்டு செல்கின்றனர்.

இதேவேளை குடிதண்ணீர் பற்றாக் குறையால் இப்பகுதியில் உள்ள கட்டாக்காலி கால்நடைகளும் தண்ணீர் இன்றி அலைந்து திரிவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (04-224)



யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மரம் நடுகை நிகழ்வு புத்தாண்டு தினமான நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதன்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம், யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ப.கிரிதரன், சங்கத்தின் பொதுமுகாமையாளர் து.மனோகரன், சங்க இயங்குநர் சபை உறுப்பினர் எஸ்.[illegible], சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் கே.தெய்வேந்திரன் ஆகியோர் மரங்களை நாட்டுவதைப் படங்களில் காணலாம். (படங்கள்:லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 05 ★ 10 ★ 1943



உதிர்வு 16 ★ 03 ★ 2009

### அமரர் கனகசிங்கம் சோதிலிங்கம்

கடந்த 16.03.2009 அன்று எம்மை விட்டுப் பிரிந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (15.04.2009) புதன் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடை பெறும்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

மானிப்பாய் வீதி,
ஊரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.

திருமதி சோ.வனசாமலர்
பிள்ளைகள்.

## திருட்டு அதிகரிப்பு

சுழிபுரம், ஏப்.13

மூளாய்ப் பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் நடைபெறுவது அதிகரித்துள்ளது. சென்ற வாரம் இரு வீடுகளிலுள்ள பெறுமதிமிக்க பொருள்கள் களவாடப்பட்டுள்ளன. வீட்டிலுள்ளவர்கள் வெளியே சென்று வருவதற்கிடைப்பட்ட நேரத்திலேயே திருட்டுச் சம்பவம் நடைபெற்றுள்ளன. தொலைக்காட்சிப் பெட்டிகள், தொலைபேசிகள் மற்றும் எடுத்துச் செல்லக்கூடிய பெறுமதியான பொருள்களே இவ்வாறு திருடப்பட்டுள்ளன. திருடர்களைப் பிடிப்பதற்கு விழிப்புக்குழுவினர் விசாரணை செய்து வருகின்றனர்.

இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

(09-24)

## மரண அறிவித்தல்

### செல்வி வேணுரேகா திரவியம்



தோட்டத்துவளவு, அல்வாய் தெற்கு, வதிரியைச் சேர்ந்த செல்வி வேணுரேகா திரவியம் 13.04.2009 திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் ஆறுமுகம் திரவியம் - காலஞ்சென்ற தங்கமணி தம்பதியினரின் கனிஷ்ட புதல்வியும், அன்னபாக்கியத்தின் (கனடா) வளர்ப்பு மருமகளும் காலஞ்சென்ற சசிகரன் மற்றும் பவாநந்தினி, காலஞ்சென்ற ஹேமலதா மற்றும் பிரதீப் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவலிங்கம் கந்தசாமி (கனடா), செந்தூர்நாதன் (கனடா), பகிரதன் (கனடா), சுதாகரன் (கனடா), சுதர்சன் (கனடா), சுயந்தன் (கனடா) அன்னலச்சுமி, தனலச்சுமி, விஜயலச்சுமி, சுதாஜினி, சுகந்தினி ஆகியோரின் மைத்துனியும் ஜெயக்குமார் காலஞ்சென்ற கிருஷ்ணராஜா மற்றும் ஸ்ரீஸ்கந்தராஜா, நிருபரன், பிறேமசீலன் ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும், காலஞ்சென்ற கோபால் (கனடா) மற்றும் ஆறுமுகம் (கனடா), யோகாம்பிகை (கனடா) ஆகியோரின் மருமகளும், நிலக்ஷன், லேத்திகா, ஹேமலதன் ஆகியோரின் சிறியதாயும் பரராஜசிங்கம் (பொலிஸ் உத்தியோகத்தர், கொழும்பு) அவர்களின் பெறாமகளும் சந்திரிகா, தனுகிருஷ்ணா ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2009) புதன்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஆலங்கட்டை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோட்டத்து வளவு
அல்வாய் தெற்கு, வதிரி. (C/558078) தகவல்: குடும்பத்தினர்

## ஈராண்டு நினைவஞ்சலி



மண்ணுக்கு: 1956.10.26

விண்ணுக்கு: 2007.05.08

### அமரர் சதாசிவம் பஞ்சலிங்கம்

திதி : ஷஷ்டி

அணையாத உம் பிரிவில்
வாழ்ந்துவரும் இந்நாளில்
ஆண்டிரண்டு ஆனதய்யா
ஆனபோதும் ஆறவில்லை நம் துயரம்
ஆண்டு கோடி நகர்ந்திடினும்
அழியாது உம் நினைவு

முத்ததம்பி லேன், மானிப்பாய். மனைவி.

## எல்லே போட்டிகள் சனியன்று ஆரம்பம்

வலி.வடக்கு,ஏப்.15

யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்தும் ஆண்களுக்கான எல்லே விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் சனிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளன.

அன்றைய போட்டியில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

- கரவெட்டி எதிர் நல்லூர்.
- தெல்லிப்பழை எதிர் சண்டிலிப்பாய்.
- சங்கானை எதிர் காரைநகர்.
- உடுவில் எதிர் யாழ்ப்பாணம்.
- சாவகச்சேரி எதிர் ஊர்காவற்றுறை.
- மருதங்கேணி எதிர் பருத்தித்துறை.
- நெடுந்தீவு எதிர் வேலணை

(50-86)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் பகுதித் தலைவரும் சிரேஷ்ட ஆசிரியையுமாகிய
திருமதி சோ.சிறிஸ்கந்தராஜா
அவர்களினதும் எமது பாடசாலையின் பழைய மாணவியான
செல்வி மெற்றில்டா ஜோசப்
அவர்களினதும் அன்புத்தாயார்

**திருமதி ஜோசப் எலிசபெத் (நல்லம்மா)**

காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்.
யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம்.

## மரண அறிவித்தல்

### கந்தையா தெய்வேந்திரராசா



6ஆம் வட்டாரம், வேலணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தெய்வேந்திரராசா (13.04.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து கந்தையா -சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மகனும், கலாநிதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கனகசிங்கம், சிவலெட்சுமி (யாழ்ப்பாணம்), சிபோன்மணி (வட்டக்கச்சி), செந்தில்ராசா (திருகோணமலை), காலஞ்சென்ற சற்குணசிங்கம், கமலாதேவி, கருணாநிதி, மேகலா ஆகியோரின் அன்புச் சகோதரரும் நாகபூசணி, சண்முகலிங்கம், நாகரெத்தினம், கலாநிதி, யோகேஸ்வரன், தர்மேஸ்வரி, பூபாலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2009) பி.ப. ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேலணை தெற்கு அம்பலவி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

6ஆம் வட்டாரம்
சிற்பனை வீதி, வேலணை. (84415) தகவல்: மனைவி, சகோதரர்கள்

## வேலணைப் பிரதேச செயலகம் வெற்றி

யாழ்ப்பாணம், ஏப்.15

வேலணை பிரதேச செயலக ஊழியர் அணிக்கும் தீவக வலயக் கல்வி அலுவலக ஊழியர் அணிக்கும் இடையே நடைபெற்ற 10 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட சிநேகபூர்வமான மென்பந்து துடுப்பாட்டத்தில் வேலணைப் பிரதேச செயலக அணி 50 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இவ்வாறான போட்டிகள் அலுவலக ஊழியரிடையே சிநேகபூர்வ மனப்பாங்கை வளர்க்க உதவும் என தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

(50-267)

## சிதம்பரக் கல்லூரி - வல்வெட்டித்துறை

சுவீகரிக்கப்பட்ட விளையாட்டு மைதானக் காணி கையளிப்பு வைபவம்

### இதயம் நிறைந்த நன்றிகள்



வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி விளையாட்டு மைதானத்திற்கான காணி சுவீகரிப்பு முதல் கையளிப்பு வரை தம்மாலான உதவிகளையும் நிர்வாகக் கடமைகளையும் சிறப்பாகவும், விரைவாகவும் செய்து உதவியமைக்காக எமது இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

- யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திரு.க.கணேஷ் அவர்களுக்கும்
- மேலதிக அரசாங்க அதிபர் (காணி) திரு.ஆ.சிவசுவாமி அவர்களுக்கும் சக உத்தியோகத்தர்களுக்கும்
- வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் திரு.இ.வரதீஸ்வரன் அவர்களுக்கும், நிர்வாக உத்தியோகத்தர் திரு.க.முத்தையா, காணி உத்தியோகத்தர் திரு.S.ஞானசேகரம் ஆகியோருக்கும்
- யாழ்.மாவட்ட நில அளவை அத்தியட்சகர் திரு.பொ.சிவதாஸ் அவர்களுக்கும் சக உத்தியோகத்தர்களுக்கும்
- வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.வை. செல்வராஜா அவர்களுக்கும்
- யாழ்.மாவட்ட விலை மதிப்பீட்டாளர், உத்தியோகத்தர்களுக்கும்
- வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, வல்வெட்டித்துறை வடமேற்கு கிராம உத்தியோகத்தர் J/388 திரு. எஸ்.தவனேஸ்வரன் ஆகியோருக்கும் எமது இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் காணி சுவீகரிப்பு தொடர்பில் முன்முயற்சி எடுத்து இடைவிடாது காரியமாற்றிய எமது கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர் ஓய்வுபெற்ற ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டாளர் திரு. R.S.சிவசுப்பிரமணியம் J.P அவர்களுக்கும் எமது விசேட நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சிதம்பரக் கல்லூரி சமூகம்
பழைய மாணவர் சங்கம் - கொழும்பு,
பழைய மாணவர் சங்கம் - வல்வெட்டித்துறை,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
மற்றும் நலன்விரும்பிகள்.


மல்டிமீடியா பயிற்சிநெறிகள்

கொம்ப்யூட்டர் டிப்ளோமா கற்கை நெறிகளுக்கான விசேட பிரிவுகள் நாளை முதல் ஆரம்பமாகின்றன.




காலம் : 3 மாதம்

இன்றைய உலகில் எவ்விடத்திற்கு சென்றாலும் உடனடி வேலைவாய்ப்பை வழங்கும் ஒரே கல்வியாக திகழ்வது மல்டிமீடியா மட்டுமே....

இந்தியாவில் கிராபிக்ஸ் அனிமேஷன் துறைக்காக போட்டி நடாத்தும் ஒரே நிறுவனமான...
CSC-SOFTVIEW VISUAL COMMUNICATION
வழங்கும் சர்வதேச தரச் சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளக் கூடிய பயிற்சி நெறியை எமது யாழ்நகரம் மற்றும் நெல்லியடி பயிற்சி மையங்களில் மேற்கொள்ளலாம்.

Advanced Diploma in Digital Pre-Press — ADDP
இலவச பாடநூல்களுடன் கூடிய கற்கை நெறி — 100% Practical
Diploma in Digital Video Production — DVP
Certificate in Adobe Photoshop — 2 Months

ASIAN-CSC COMPUTER EDUCATION
2G,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் Tel 222-5677
கிளை : கொடிகாமம் வீதி, நெல்லியடி Tel 077-3122198


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் இனப்பிரச்சினை குறித்து மத்திய அரசு எத்தனைமுறை விவாதித்தது?

## சிதம்பரத்திடம் ராமதாஸ் கேள்வி



சென்னை, ஏப்.15

இலங்கை இனப்பிரச்சினை குறித்து மத்திய அமைச்சரவை எத்தனைமுறை விவாதித்திருக்கிறது என்று மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரத்திடம் பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினையில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் செயற்பாடு குறித்து அமைச்சரவைக் கூட்டத்திலோ அல்லது வேறு பொருத்தமான இடத்திலோ பா.ம.க. கருத்து தெரிவித்திருக்கலாம். ஆனால் அதை விட்டுவிட்டு தற்போது விமர்சிப்பது முறையா என்று மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் கேள்வி எழுப்பயிருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது :

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தனது நிலைப்பாட்டை பா.ம.க ஒருபோதும் விட்டுக் கொடுத்ததில்லை. பன்னாட்டுச் சட்டத்தின்கீழ் நேரடியாகத் தலையிடுவதற்கான உரிமையும் கடமையும் இந்தியாவுக்கு உள்ளது என பல முறை பா.ம.க வலியுறுத்தி வந்துள்ளது.

இக்கருத்தை பிரதமரை நேரில் சந்தித்த போதும், மனுக்கள் வாயிலாகவும் தெரிவித்துள்ளது. கடந்த நாடாளுமன்றக் கூட்டத் தொடர் முழுவதும் பா.ம.க உறுப்பினர்கள் கறுப்புச் சட்டை அணிந்து இலங்கைத் தமிழர் பிரச்சினையை எழுப்பி, இந்தியாவுக்குள்ள சட்டப்பூர்வ கடமையை நிறைவேற்றவேண்டும் என வாதிட்டுள்ளனர்.

ஆனால் தேர்தலுக்காக இலங்கைப் பிரச்சினையை பா.ம.க. கையில் எடுத்துள்ளதாக சிதம்பரம் குற்றம்சாட்டுவது எந்த வகையில் நியாயமாகும்? மத்தியில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு பதவியில் இருந்த கடந்த 4 ஆண்டு 11 மாதங்களில் இலங்கைப் பிரச்சினை குறித்து எத்தனை முறை அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டுள்ளது? அமைச்சரவைக் கூட்டத்துக்கு இப்பிரச்சினை வரவில்லையெனில் இதை விவாதப் பொருளாகக் கொண்டு வருவதற்கான பொறுப்பான அமைச்சகம் எது? சம்பந்தப்பட்ட அமைச்சகம் அதை ஏன் செய்யத் தவறியது?

பன்னாட்டுச் சட்டத்தின் கீழ் இலங்கைப் பிரச்சினையில் நேரடியாகத் தலையிடுவதற்கு இந்தியாவுக்கு உரிமையும், கடமையும் சட்டத் தகுதியும் இருந்தபோதிலும் அதைப் பயன்படுத்துவது குறித்து எப்போதாவது அமைச்சரவையில் விவாதிக்கப்பட்டதா? நிதித்துறை மற்றும் உள்துறை பொறுப்பை வகித்துவரும் மூத்த அமைச்சரான ப.சிதம்பரம், இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக எப்போதாவது குரல் கொடுத்திருக்கிறாரா?

அப்பாவி மக்களுக்கு எதிராக இலங்கையில் நடத்தப்படும் தாக்குதல்களுக்கு இந்திய அரசு ஆதரவு அளித்து வருகிறது என்ற குற்றச்சாட்டு பரவலாக எழுந்துள்ளது. இலங்கை இராணுவத்துக்குப் பயிற்சி அளித்தல், ராடார் வழங்கியது, வானூர்திகளை வேவுபார்த்தல் உள்ளிட்ட பணிகளை மத்திய அரசு மேற்கொண்டது. இவற்றை மத்திய அரசு மறுக்கவில்லை. இதற்கு சிதம்பரம் என்ன பதில் சொல்லப் போகிறார் - என்றுள்ளது.

# பணம் ஈட்டுவதே மாயாவதியின் நோக்கம் - ராகுல் காந்தி



சென்னை, ஏப்.15

பணம் ஈட்டுவதை மட்டுமே தனது நோக்கமாகக் கொண்டுள்ளார் உத்தரப் பிரதேச முதல்வர் மாயாவதி என, காங்கிரஸ் பொதுச் செயலர் ராகுல் காந்தி குற்றம் சாட்டினார்.

உத்தரப் பிரதேச மாநிலம் சந்தோலியில் காங்கிரஸ் வேட்பாளர் சைலேந்திர சிங்கை ஆதரித்து பிரசாரம் செய்த போது மாயாவதியின் மீதான இந்தக் குற்றச்சாட்டை ராகுல் காந்தி சுமத்தினார்.

மேலும் அவர் கூறியதாவது:

மாயாவதி தன்னை தலித், ஏழை மக்களின் ஆதரவாளர் எனக் கூறிக்கொள்கிறார். ஆனால் இதில் எவ்வித உண்மையும் இல்லை. அவர், தலித் மற்றும் ஏழை மக்களின் விரோதி என்பதே உண்மை.

கடந்த 2 ஆண்டுகால ஆட்சியில் தலித் மற்றும் ஏழை மக்களின் மேம்பாட்டுக்காக மாயாவதி எதையுமே செய்யவில்லை. ஏனென்றால் மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்பது மாயாவதியின் நோக்கமல்ல; தனக்கு பணம் ஈட்ட வேண்டும் என்பது மட்டுமே அவரது நோக்கம்.

எனவே, நீங்கள் (வாக்காளர்கள்) காங்கிரஸுக்கு வாக்களித்து மீண்டும் ஆட்சியில் அமர்த்தினால் மாநிலத்தை மீண்டும் முன்மாதிரி மாநிலமாக மாற்றுவதற்கு காங்கிரஸ் அரசு பாடுபடும் - இவ்வாறு கூறினார் ராகுல் காந்தி.

# முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு எதிராக தமிழக அரசு அவதூறு வழக்கு

சென்னை,ஏப்.15

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா மீது தமிழக அரசு அவதூறு வழக்குத் தொடர்ந்துள்ளது. இதுதொடர்பாக, சென்னையிலுள்ள முதன்மை நீதிமன்றத்தில் அரசு வழக்கறிஞர் தாக்கல் செய்துள்ள மனு விவரம் வருமாறு;

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா, இலங்கைத் தமிழர்கள் தொடர்பாக 22.01.2009 ஆம் திகதி அறிக்கை வெளியிட்டிருந்தார். 'தினமணி' யில் 23.01.09 அன்று வெளியான அந்த அறிக்கையில், 'இலங்கைத் தமிழர்களுக்காக கருணாநிதி திரட்டிய நிதி அந்த மக்களுக்குப் போய் சேர்ந்ததாக இதுவரை தகவல் இல்லை. அந்த நிதியை கருணாநிதி தன்னுடைய குடும்ப நிதியில் சேர்த்துக் கொண்டு விட்டாரோ என்ற சந்தேகம் மக்கள் மனதில் எழுந்துள்ளது' என்று ஜெயலலிதா கூறியுள்ளார். இது முதல்வர் கருணாநிதியின் நற்பெயருக்கும், புகழுக்கும் களங்கம் கற்பிக்கும் வகையில் உள்ளது. இலங்கைத் தமிழர்களுக்காக திரட்டப்பட்ட ஒவ்வொரு ரூபாவுக்கும் முறையான கணக்கு உள்ளது. இந்த நிதி, மத்திய அரசின் அனுமதியுடன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் அளிக்கப்பட்டது. அந்த சங்கத்தின் மூலமாக இலங்கைத் தமிழர்களுக்கு நிதி வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பான அனைத்து நடைமுறைகளும் முன்னாள் முதல்வரான ஜெயலலிதாவுக்கு தெரிந்திருந்தும், கருணாநிதி மீது அவதூறு பரப்பும் நோக்கம் கொண்ட கருத்தை தெரிவித்துள்ளார். கருணாநிதியின் அமைச்சரவை சகாக்கள், கட்சித் தொண்டர்கள், பொது மக்கள் மத்தியில் அவரது மதிப்பைக் குறைக்கும் வகையில் ஜெயலலிதாவின் அறிக்கை உள்ளது. கருணாநிதிக்கு மன உளைச்சலையும், அவரது புகழுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பையும் இதன் மூலம் ஜெயலலிதா ஏற்படுத்தியுள்ளார். பி.வி. கல்யாணசுந்தரம், பலராமன், எஸ்.ஏ. எம். உசேன் உள்ளிட்டோர் முதல்வர் கருணாநிதியிடம் இதுதொடர்பாக நேரில் விசாரித்தனர். ஜெயலலிதாவின் அறிக்கையைப் படித்த பிறகு, கருணாநிதியின் மீதான தங்களது உயர்ந்த எண்ணத்தில் மாறுதல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் அப்போது தெரிவித்தனர். இதுதொடர்பாக, ஜெயலலிதாவுக்கு ஜனவரி 28ஆம் திகதி நோட்டீஸ் அனுப்பப்பட்டது. இதையடுத்து, தமிழக அரசின் அனுமதியுடன் வழக்குத் தொடரப்படுகிறது - என்றுள்ளது.

# பா.ஜ.க வுடன் கூட்டணி கிடையாது; ஜெயலலிதா திட்டவட்டமாக அறிவிப்பு



சென்னை,ஏப்.15

பாரதிய ஜனதாவுடன் அ.தி.மு.க. கூட்டணி அமைக்கும் என்ற செய்திகள் அடிப்படை இல்லாதவை என அ.தி.மு.க. பொதுச் செயலர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

தேர்தலுக்குப் பின் பா.ஜ.க. தலைமையிலான ஆட்சி மத்தியில் அமைய அ.தி.மு.க. போன்ற கட்சிகள் எங்களுக்கு ஆதரவு அளிக்கும் என பா.ஜ.க. தலைவர் எல்.கே. அத்வானி அண்மையில் கூறியிருந்தார்.

இதையடுத்தே பா.ஜ.க.வுடன் அ.தி.மு.க. எவ்விதக் கூட்டணியும் அமைக்காது என ஜெயலலிதா மறுத்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு;

தேர்தலுக்குப் பிறகு பா.ஜ.க.வுடன் அ.தி.மு.க. கூட்டணி சேரும் என சில ஊடகங்கள் செய்தி பரப்பி வருகின்றன. நாங்கள் 2009 மக்களவைத் தேர்தலுக்காக இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், பாட்டாளி மக்கள் கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய கட்சிகளுடன் கூட்டணி அமைத்துள்ளோம்.

எனவே பா.ஜ.க.வுடன் நாங்கள் கூட்டணி அமைப்போம் என்ற செய்திகள் எவ்வித அடிப்படையும் இல்லாதவை. தேர்தலுக்குப் பிந்திய கூட்டணி குறித்து நாங்கள் எந்தக் கட்சியுடனும், எந்தப் பேச்சும் நடத்தவில்லை என்றுள்ளது.

# 'ருவன்ரி - 20' கிரிக்கெட் தொடருக்கு கொலிங்வுட் அணித் தலைவர் ?




விரைவில் தொடங்க இருக் கும் ருவன்ரி-20 உலக கிண்ண தொடருக்கான இங்கிலாந்து அணிக்கு கொலிங் வூட் புதிய அணித் தலைவராக நிய மிக்கப்படுவார் என தெரிகிறது. சமீபத்தில் 'ருவன்ரி-20' உலக கிண்ணப் போட்டியில் பங்கேற்க இருக்கும் உத்தேச இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டது.

இதில் தற்போது அணித்தலைவராக இருக்கும் ஸ்டிராஸ் பெயர் சேர்க்கப்பட வில்லை. வர இருக்கும் ஆஸ்திரேலியா வுக்கு எதிரான ஆஷஸ் தொடருக்காக அவருக்கு ஓய்வு அளிக்கப்பட்டு உள்ள தாக கூறப்படுகிறது. இதனிடையே அணியின் புதிய தலைவராக கொலிங்வுட் நியமிக்கப்படலாம் என உறுதியாகத் தெரிகிறது.

இதுகுறித்து அவர் கூறுகையில், 'கார ணங்கள் எதுவாக இருப்பினும் பல்வேறு தூண்டுதல்களால் மீண்டும் பதவி கிடைக் கும் என தெரிகிறது. ஆனால் இதுபற்றி எனக்கு எந்த தகவலும் வரவில்லை. புதிய அணி இயக்குநர் நியமிக்கப்பட உள்ள நிலையில் எதுவேண்டுமானாலும் நடக்கலாம்' என்றார். இதனிடையே 'ருவன்ரி -20' அணியில் தலைவர் பதவி கிடைத்தால் அசத்துவேன் என்று காத்திருக்கிறார் அந்த அணியின் மற்றொரு வீரர் பிளின் ரொப்

# மும்பையில் மெழுகுச்சிலையை பார்த்து மெய்மறந்தார் சச்சின்!

மும்பையில் சச்சினின் தத்ரூப மெழுகுச்சிலையைப் பார்த்த மகிழ்ச்சியில் 'நிஜ' சச்சின் மெய்மறந்தார். புகழ்பெற்ற லண்டன் 'மேடம் டுஸாட்ஸ்' மியூசியம் உலகின் முக்கிய பிரமுகர்களின் சிலையை வடிவமைத்து, அவர்களுக்கு புகழ் சேர்த்து வருகிறது. இந்தியாவிலிருந்து மகாத்மா காந்தி, இந்திரா, பொலிவுட் நட்சத்திரங்களான அமிதாப்பச்சன், சல்மான்கான், ஐஸ்வர்யாராய், ஷாருக்கான் ஆகியோருக்கு இங்கு மெழுகுச்சிலை உள்ளது.

விளையாட்டுத் துறையில் இந்தியா சார்பில் முதன் முதலாக சச்சினுக்கு சிலை தயாரிக்க, இந்நிறுவனம் முடிவு செய்தது.

சுமார் 3 மாதங்களாக 3 கோடி ரூபாய் செலவில் லண்டனில் தயாராகி வந்தது சச்சினின் மெழுகுச் சிலை. இதற்கு சச்சின் தனது ஆடைகளை வழங்கி இருந்தார். நேற்று முந்தினம் மும்பையில் இச் சிலையை சச்சின் திறந்து வைத் தார்.

அப்போது பேட்டி அளித்த சச்சின் கூறியது:

'மேடம் டுஸாட்ஸ்' மியூசியத்தில் ஒரு கிரிக்கெட் வீரராக நான் இடம் பெற்றது பெரும் மகிழ்ச்சி அளிக்கிறது. கிரிக்கெட் மீது நான் கொண்ட ஈடுபாட்டின் பிரதிபலிப்பாக இச்சிலையை கருதுகிறேன். இதைப் பார்த்தவுடன் எனக்கு ஏற்பட்ட அனுபவத்தை விவரிக்க முடியவில்லை. மெய்மறந்து விட்டேன். இச்சிலை அப்படியே தத்ரூபமாக இருந்தது. எனது மகன் விளையாட்டாக அந்த சிலையில் உள்ள துடுப்பை எடுத்து விளையாட முயற்சித்தான். ஆனால் நான் அருகில் செல்ல வேண்டாம் என தடுத்து விட்டேன்.

ஒவ்வொரு கிரிக்கெட் வீரருக்கும் ஒரு கனவு உண்டு. இந்தியாவுக்காக உலகக் கிண்ணத்தை வென்று தர வேண்டும் என்பதே எனது கனவு. இவ்வாறு சச்சின் கூறினார்.

இதற்குமுன் 'மேடம் டுஸாட்ஸ்' மியூசியத்தில் மேற்கிந்தியாவின் பிரைன் லாரா, இங்கிலாந்தின் இயான்பொத்தம், ஆஸ்திரேலியாவின் ஷேன்வோர்ண் ஆகிய கிரிக்கெட் ஜாம்பவான்களுக்கு மெழுகுச் சிலை உள்ளது.




மெழுகுச் சிலையுடன் சச்சின்

# ஐ.சி.சி.ஒருநாள் தரவரிசையில் முதலிடத்தில் தென்னாபிரிக்கா

சர்வதேச கிரிக்கெட் பேரவையின் (ஐ.சி.சி) ஒருநாள் அணிகளுக்கான தரவரிசைப் பட்டியலில் இந்திய அணி 2 வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

தென்னாபிரிக்காவில் நடந்து வரும் ஆஸ்திரேலியா- தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையேயான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை, 3-1 என்ற போட்டிக்கணக்கில் தென்னாபிரிக்கா கைப்பற்றியுள்ளது.

இன்னும் ஒரு போட்டி மீதமுள்ள நிலையிலும் தொடரை வென்றதன் மூலம் தென்னாபிரிக்கா 127 புள்ளிகளுடன் ஐ.சி.சி ஒருநாள் தரவரிசைப் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

சமீபத்தில் நடந்த சில ஒருநாள் போட்டிகளில் சிறப்பான வெற்றிகளைக் குவித்தாலும் புள்ளிகள் அடிப்படையில் 3வது இடத்தில் இருந்த இந்திய அணி, தற்போது வெளியிடப்பட்டு உள்ள புதிய பட்டியலில் 122 புள்ளிகளுடன் 2 வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒரு நாள் தொடரில் தோல்வியடைந்ததன் மூலம் ஆஸ்திரேலிய அணி 121 புள்ளிக ளுடன் 3ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதுவருட தினமான நேற்று முல்லைத்தீவு மக்கள் பாதுகாப்பு வலயத்தில் வாழும் சிறுவர்கள் கஞ்சிக்காக குழுமியிருக்கும் காட்சி இது.

## ஏ-9 வீதியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபையின் கிளைக் காரியாலயம் ஒன்றை திறக்கவுள்ளதாக பெருந்தெருக்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

ஏ-9 வீதியில் உள்ள நிலக்கண்ணி வெடிகள் யாவும் அகற்றப்பட்டு அது தொடர்பான பாதுகாப்பு அமைச்சின் அறிக்கை கிடைக்கப்பெற்றதும்,ஏனைய பணிகள் அனைத்தும் ஆரம்பமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சின் அறிக்கை அடுத்த மாதத்தின் இரண்டாம் வாரத்தில் கிடைக்கும் எனவும் பெருந்தெருக்கள் அமைச்சு தெரிவித்துள்ளது. (அ-6)

## எமது அனுசரணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்துள்ள செய்திகள் குறித்து கருத்துக் கூறுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

2006 ஆம் ஆண்டில் சமாதான முயற்சிக்கான மத்தியஸ்த செயற்பாடுகள் நிறுத்தப்பட்டு விட்டன. அவ்வாறிருக்கையில் அப்போதிருந்தே நாம் அனுசரணையாளர்களாக இருக்க முடியாது என்று பௌவர் கூறினார். (அ-1)

## புல்மோட்டைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் கூட்டிச் செல்லப்பட்டவர்களில் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது. இருபது தொகுதியினராக அழைத்துச் செல் லப்பட்ட இவர்களுடன் இதுவரை 9 ஆயி ரம் பேர் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின ரால் அழைத்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-06)

## இப்போதைய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யின் ஆங்கில சேவைக்கு நேற்று அளித்த பேட்டியில் அவர் இது குறித்துத் தெரிவித்ததாவது:-

மனித நேயப் போர் நிறுத்தம் அல்லது இலங்கைப் பாதுகாப்புப் படையினர் நடத்தும் தாக்குதல் நடவடிக்கைகளில் ஒரு தற்காலிக நிறுத்தம் என்பது நடைமுறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

தற்போதைய இராணுவச் சூழலை வைத்துப் பார்க்கும் போது, பொதுமக்கள் தான் விடுதலைப் புலிகளுக்கு இருக்கும் கடைசி கேடயம் என்று தோன்றுகிறது. நான் ஓர் இராணுவ ஆய்வாளர் இல்லை என்ற போதிலும், அங்குள்ள சூழல் புலிகளுக்கு நம்பிக்கை அளிப்பதாகத் தோன்றவில்லை.

இதற்கு ஒரே தீர்வு புலிகள் தமது ஆயுதங்களைக் கீழே போடுவதுதான்.

மேலும் தாக்குதல் இடைநிறுத்தம் நடைமுறைக்கு வருவதற்கு சற்று முன்னதாகவும் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வர முயன்ற ஆறு பொதுமக்களை விடுதலைப் புலிகள் சுட்டுக் கொன்றுள்ளனர் எனத் தெரியவந்திருக்கிறது - என்றார். (அ-06)

## தமிழ்த்தேசிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியுறவுச் செயலர் சிவ்சங்கர் மேனனின் அழைப்பின் பேரில் இன்று டில்லிக்கு செல்லும் தமிழ்த்தேசிய கூட்டமைப்புக் குழுவில் அதன் தலைவர் இரா.சம்பந்தன், மாவை.சேனாதிராஜா, சுரேஸ்பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

இன்றும் நாளையும் புதுடில்லியில் தங்கியிருக்கும் இக்குழுவினர் சிவ்சங்கர் மேனன் உட்பட மற்றும் முக்கிய தலைவர்களை சந்தித்து பேச்சு நடத்துவர் என்று கொழும்பில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இக்குழுவினர் யார் யாரைச் சந்தித்து பேச உள்ளனர்என்ற விவரம் நேற்று இரவு வரை முடிவு செய்யப்படவில்லை என்றும் அந்த வட்டாரங்கள் கூறின.

இந்தப் பேச்சுக்களின் போது நிரந்தர போர் நிறுத்தம் தொடர்பாக இந்தியத் தலைவர்களிடம் கூட்டமைப்புக்குழு வலியுறுத்தும் என்று தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## வன்னி மக்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், வன்னியில் சிக்கியுள்ள மக்களின் உடனடி மனிதாபிமான உதவிகள் குறித்து ஆராயப்பட்டது.

அங்கு எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் சில வருமாறு:-

* அரசு அறிவித்துள்ள 48 மணி நேர தாக்குதல் நிறுத்தத்தை வரவேற்றுள்ள இணைத்தலைமை நாடுகள், குறுகிய இடத்தில் சிக்கியுள்ள ஒருலட்சம் மக்கள் இரத்தக் களரி இன்றி வெளியேற அனுமதிக்க வேண்டும்.

* அவசர உதவியாக உணவு மற்றும் மருந்துப்பொருள்களை எடுத்துச்செல்ல இருதரப்பினரும் அனுசரணைப்பணி வழங்க வேண்டும்.

* சிக்கியுள்ள மக்களில் காயமடைந்த மற்றும் நோயாளர்கள் வெளியேறுவதற்கு இரு தரப்பினரும் அனுசரணைப் பணியை மேற்கொள்ள வேண்டும்.

* சிக்கியுள்ள மக்கள் சுதந்திரமாக நட மாடுவதற்கு விடுதலைப் புலிகள் அனுமதிக்க வேண்டும்.

* இலங்கை நிலைவரம் தொடர்பாக இணைத்தலைமை நாடுகள் தொடர்ந்து அவதானித்து கலந்துரையாடல்களை நடத்தும். (அ-1)

## காங்கேசன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பலில் பயணம் செய்ய பதிவு செய்தவர்களையும் அவசர தேவைக்காக பயணம் மேற்கொள்ள வேண்டியவர்களையும் இன்று முற்பகல் 11 மணிக்கு யாழ். ரயில் நிலையப் பகுதிக்கு பயண ஏற்பாடுகளுடன் வருமாறு அரச அதிபர் மேலும் கேட்டுள்ளார். (அ-1)

## பயங்கரவாதம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இழந்துவிட்டது. அவர்களது கனரக ஆயுதங்கள் படையினரால் இந்தவருடம் அழிக்கப்பட்டுவிட்டன. அவர்களின் விமானங்கள், கடற்கலங்கள் யாவும் அழிக்கப்பட்டுவிட்டன.

விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள பொதுமக்களை மனிதாபி மான நடவடிக்கை மூலம் விடுவிக்க படை யினர் தற்போது ஈடுபட்டுள்ளனர்.

மக்கள் பாதுகாப்பு படையினரின் பிரதேசங்களுக்கு வந்தபின் அவர்களை படையினர் நட்பு ரீதியாக நடத்துவார்கள்.

அரசாங்கத்தால் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு வரும் மக்கள் இரக்க சிந் தனையுடனும், நற்புறவுடனும், ஆதரவுட னும் நடத்தப்படுகிறார்கள். எமது இராணுவத்தின் இந்த குணாதிசயங்கள் அவர்கள் ஒழுக்கம் நிறைந்தவர்கள் என்பதனைக் காட்டுகின்றன.

இராணுவம் சகல இலங்கையர்களுக் கும் சமாதானம் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே போராடுகிறது. வேறு எதற்காகவும் இல்லை.

விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் சுதந்திரத்தை படையினர் விரைவில் ஏற்படுத்துவர் -என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-1)

## ஆயுதங்களைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் கொழும்பில் நடத்திய விசேட செய்தியாளர் மாநாட்டில் ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபயவர்த்தனா அரசின் மேற்கண்ட முடிவை அறிவித்தார்.

பிரச்சினையில் சரித்திரத்தைக் கவனத்தில் கொண்டால் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே போடும் வரையில் போர் நிறுத்தம் ஒன்றுக்கு அரசாங்கத்தினால் இணங்க முடியாது -

விடுதலைப் புலிகளுக்கு மூச்சு விடுவதற்கும், படையினரின் முற்றுகைக்குள் அகப்பட்டுள்ள அவர்களுடைய தலைவர்கள் வெளியே தப்பிச் செல்வதற்கும் நேரம் தேவையாக இருக்கின்றது அதனாலேயே நிரந்தரமான போர் நிறுத்தம் ஒன்றை விடுதலைப் புலிகள் கோருகின்றார்கள் - என்று அவர் கூறினார்.

விடுதலைப் புலிகளின் அறிவிப்பு குறித்து வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித கோஹன்ன தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை அவர்கள் எந்தவிதமான நிபந்தனைகளையும் விதிக்கக்கூடிய நிலையில் இப்போது இல்லை.

புலிகள் இப்போது தோற்றுவிட்டார்கள். ஈழம் என்ற மாயையும் கலைந்துவிட்டது. புலிகள் இப்போது செய்ய வேண்டியது ஒன்றே ஒன்றுதான். அதாவது மக்களை மனித கேடயமாக பயன்படுத்துவதை விட்டுவிட்டு, தமது ஆயுதங்களை அவர்கள் கீழே போட வேண்டும். அவ்வளவுதான். அவர்கள் ஆயிரக்கணக்கான மக்களை பலவந்தமாக பிடித்து வைத்திருக்கிறார்கள். அவர்களை புலிகள் விடுவிக்க வேண்டும். எவரையும் பலவந்தமாக தடுத்து வைப்பது ஒரு குற்றச் செயல் - என்றார்.(அ)

## முல்லையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிளகாய் - 9,000 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றன.ஒரு பால் மா பைக்கற்( 400 கிராம்) 2,200ரூபாப்படி விற்பனை செய்யப்படுகின்றது.

ஓரிரு கடைகளே அங்கு இயங்குவ தால் அவற்றிலேயே பொதுமக்கள் தமது தேவைக்கு பொருள்களைக் கொள்வனவு செய்வதாக கூறப்பட்டது. (அ-1)

## அவுஸ்திரேலியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

வன்னியில் வன்முறைகளுக்கு முடிவு ஏற்பட வசதியாக நிரந்தரமான போர் நிறுத்தம் ஒன்றை கொண்டுவர அவுஸ்திரேலியா ராஜதந்திர வழியில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரினர்.

இனப்படுகொலையை நிறுத்த ஆஸி தலையிடலாம் என்ற உரிமையுடன் எமது கோரிக்கையை முன்வைக்கிறோம் என்று ஆர்ப்பாட்டக்காரர்களின் பேச்சாளர் மகேந்தின் இரத்தினம் தெரிவித்தார்.

இலங்கையின் நிலைமை மிக மோசமாக உள்ளது என்று வெளிவிவகார அமைச்சர் ஸ்ரெப்பின் சிமித் கூறியுள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:-

இலங்கை நிலைவரம் தொடர்பாக கரிசனை கொண்டுள்ளோம். பேச்சு மூலம் அரசியல் தீர்வு காணுமாறு கோரியிருக்கிறோம்.

ஆயுதங்களைக் கீழேவைத்து பேச்சுக்களில் பங்குபற்றுமாறு விடுதலைப் புலிகளை ஏற்கனவே கோரியுள்ளோம். மீண்டும் அந்தக் கோரிக்கையை முன்வைக்கிறோம் - என்றார்.

சிக்குண்டுள்ள மக்களை விடுவிக்க விடுதலைப்புலிகள் முன்வரவேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார். (அ-1)

## இரண்டுநாள்...

(முதலாம் பக்கத தொடர்ச்சி)

தாக்குதல் இடைநிறுத்தம் இருந்த காலத்தில் 93 பொது மக்கள் துப்பாக்கிச்சூட்டு [illegible]யங்களுடன் புதுமாத்தளன் மருத்துவ[illegible]யில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன. 6 பொதுமக்கள் உயிரிழந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டு தினங்களிலும் பொதுவாக ஷெல் தாக்குதல்கள் இடம்பெறவில்லை எனதெரிவிக்கப்படுகின்ற போதிலும், துப்பாக்கிச் சண்டைகள் நடைபெறுகின்ற பகுதிகளில் ஒன்றிரண்டு மோட்டார் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று செவ்வாய்க்கிழமை நள்ளிரவுடன் அரசாங்கத்தின் தாக்குதல் தவிர்ப்பு முடிவுக்கு வருவதையடுத்து. அடுத்து என்ன நடக்கப்போகின்றதோ என்ற ஓர் அச்ச உணர்வு பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் இருக்கும் மக்கள் மத்தியில் மேலோங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இரண்டு நாள் அமைதிக்குப் பின்னர் மோதல்கள் மோசமாக வெடிக்கலாம் என்று அந்த மக்கள் மத்தியில் எதிர்பார்ப்பு நிலவுவதாகவும் கூறப்படுகின்றது.

தாக்குதல் இடைநிறுத்தத்தின் போது போர்நிறுத்தத்தின் முதல் நாளன்று [illegible]ராணுவம் சிவிலியன்கள் மீது தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல்கள் நடத்தியதாக விடுதலைப்புலிகள் சுமத்தியுள்ள குற்றச்சாட்டை மறுத்துள்ள இராணுவம், அரச படைகளின் மீது கடுமையான இயந்திரத்துப்பாக்கித் தாக்குதல்களை விடுதலைப்புலிகளே மேற்கொண்டதாகக் கூறியிருக்கின்றது. (அ-6)

SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்.
O/L
DAY CLASS
ஆரம்பம்: இன்று 8 a.m.

ஐடியல் அக்கடமி
சிரணிச்சந்தி சண்டிலிப்பாய் | நீராவியடி யாழ்.நகர் | அந்தோனியார் கோவில் அருகாமை, மானிப்பாய்
மாணவச் செல்வங்களே! பொறுத்திருங்கள்
புதிய ஆண்டில், நல்ல நாளில், சுபவேளையில்
ஆரம்பிக்கின்றோம் O/L DAY CLASS
ஏப்: 20 இல் ஆரம்பம்
எமது மூன்று நிறுவனங்களிலும்
யாழ்ப்பாணம்: 9AM, மானிப்பாய்: 2PM, சண்டிலிப்பாய்: 11AM.
கணித ஆசானும், நிர்வாகியும்: V.N.மதிமநாதன்.

மாபெரும் கேக் கண்காட்சி
மீண்டும் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில்
டெல்மேஜ் டிஸ்றிபியூட்டர்ஸ் பிறைவேற் லிமிட்டட் ஸ்தாபனத்தாரின் ஆதரவுடனும் - யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி, இலக்கம் 370, ஸ்ரீறங்கன் எண்ரபிறைஸ் ஸ்தாபனத்தாரின் அனுசரணையுடனும் இரண்டாவது தடவையாக
PRINCE - BETTER THAN THE BEST
பெருமையுடன் வழங்கும் மாபெரும் வண்ணமிகு கண்காட்சியும் டெல்மேஜ் பொருள்களின் விற்பனையும்
இடம்: சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
காலம்: ஏப்ரல் 17 ஆம், 18 ஆம் திகதி
நுழைவு: ரூபா 20/=
நேரம்: காலை 8.30 தொடக்கம் மாலை 5.00 மணி வரை
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
477,கஸ்தூரியார், வீதி யாழ்ப்பாணம்.
பிறின்ஸ் நிறுவனம்.

BITSMANS
கல்வி நிறுவனம், மானிப்பாய்.
38 வது வருடசேவையில்....
O/L DAY CLASS
(வழமையான ஆசிரிய குழு)
ஆரம்பம் 16.04.2009 வியாழன் 8.00AM.

21 ஆவது வருட கல்விச் சேவையில்...
O/L DAY CLASS
பிரிவு - II
ஆரம்பம்:- 16.04.2009
வியாழன் காலை 8.00 மணி
* எமது Super Grade ஆசிரியர் குழாம்.
* பிரிவு II க்கான அனுமதிகள் 30 ஆம் திகதி வரை வழங்கப்படும்.
* பிரிவு III வெகுவிரைவில்.
நாவலர்
ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.

யாழ்.நகரில் NO.1கல்வி நிறுவனம்
எடிசன் அக்கடமி
யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை - சண்டிலிப்பாய் ஆகிய 3 இடங்களிலும்
O/L DAY CLASS
(காலை 8.30 முதல் பிற்பகல் 1.30 வரை)
ஆரம்பம் 16.04.2009 வியாழக்கிழமை
யாழ்ப்பாணம் - காலை 9 மணி
வட்டுக்கோட்டை - மதியம் 12 மணி
சண்டிலிப்பாய் - மதியம் 12 மணி
* திறமை மிகு ஆசிரியர் குழுவின் ஒருங்கிணைந்த சேவை.
* கணித பாடத்திற்கு விசேட மேலதிக வகுப்பு
* கடந்த 10 வருடங்களாக மாவட்டத்தில் அதிகூடிய 10 A, 9A பெற்று சாதனைச் சிகரத்தில் நிற்கும் நிறுவனம்.
* இம்முறை 12 மாணவர்கள் எமது நிறுவனத்தில் 9ஏ பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.04.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org